
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#945**
**Nov-Dec 2024**

**பொருளடக்கம்**


✡ ஞானத்திற்கான தேடலும் அதன் பலன்களும்.................................... 2

✡ இளம் வயதில் மரித்துப்போகிற யேகோவா தேவனுடைய ஊழியக்காரர் பற்றிய சிந்தனைகள்.................................. 11

✡ பாவம் நிறைந்த உலகம்...................... 13

✡ அறிவிப்பு ...................................... 20



**BS Tamil Version - 87**

**2024**


# ஞானத்திற்கான தேடலும் அதன் பலன்களும்

The Search for Wisdom and its Results

**"அதை [ஞானத்தை] வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறது போல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்"(நீதி. 2:4,5).**

ஞானம் என்ற வார்த்தைக்கு நோவா வெப்ஸ்டர் அகராதியில் கொடுத்துள்ள பல்வேறான விளக்கங்களில் பின்வருவதானது மத சம்பந்தமான நோக்கு நிலையில் கவனத்தை தூண்டுவதாயிருக்கிறது: "வேத வாக்கிய இறையியலில் ஞானம் என்பது உண்மையான மதமாகும்." மதம் என்பதன் பொருள் என்ன? இந்த வார்த்தை (Religio) 'ரெலிஜியோ' என்னும் லத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டிருக்கிறது. அதன் பொருள், புதிதாகக் கட்டுவது, மீண்டும் கட்டுவது மற்றும் விரைவாகக் கட்டுவது என்று பொருள்படுகிறது. வெப்ஸ்டர் அகராதியைப் பொறுத்தவரை, பொதுவான அர்த்தத்தில், "விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுகிற எந்த அமைப்பு முறையையும்" அடையாளப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு அமைப்பு முறை என்று விளக்கப்படுவதைக் கவனிக்கவும். ஆனால் தோண்டி எடுக்கப்பட வேண்டிய வெள்ளி, காணமுடியாதபடி பூமியின் மேற்பரப்பிற்கு கீழாகவும், கண்டுபிடிக்கக் கடினமானதாகவும் இருக்கிறது. விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுதலின் உண்மையான அமைப்பு முறையைப் பற்றிய அறிவுக்காக தேடுவதற்கும், வெள்ளியைத் தேடுவதற்கும் இடையே ஒரு பலமான இணை ஒப்புமை இருக்கிறது.

மறைக்கப்பட்ட பொக்கிஷங்களைப் பொறுத்தவரையிலும்: ஏன் மறைக்கப்பட்டுள்ளது? அவசியப்படுகிற வரைக்கும் அது கண்டெடுக்கப்படாமல் இருப்பதற்காக. அதன் மீது பசியும் தாகமும் உடையவர்களுக்குத் தான் தேவன் சத்தியத்தை வழங்கியுள்ளார். அநேகர் சத்தியத்தைத் தோண்டி எடுப்பதற்கு (ஆழ்ந்து ஆராய்வதற்கு) மிகவும் அலட்சியமாக இருக்கிறார்கள் அல்லது பண ஆசை மற்றும் இன்பத்தை தேடுதலில் மூழ்கியிருக்கிறார்கள். சுரங்கத் தொழிலாளர்கள் தங்கள் தலையில் விளக்குகளை வைத்திருக்கிறார்கள், மேலும் சில சமயங்களில் கிடைமட்டமாக கிடந்து தேடுதலில் ஈடுபடுகிறார்கள். நாமும் தாழ்மையுடன் இருந்து, நம்முடைய மனதை ஆவியினால் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். தேவனை அறியும் அறிவை கண்டறியுங்கள். உண்மையாகவே சத்தியத்தைத் தேடும் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பார். இப்படிப் பட்டவர்களுக்காக மட்டுமே சத்தியம் எழுதப்பட்டிருக்கிறது, அத்தகையவர்களுக்கே அது வெளிப்படுத்தப்படும்.




**செய்யும் காரியங்களிலேயே ஞானமான காரியம் ஞானத்தை சம்பாதிப்பதாகும்**
நீதி. 4:7

எனவே விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுதலின் உண்மையான உள்ள அமைப்பு முறை, குறிப்பாக தேவனுடைய வார்த்தையின் ஆழ்ந்த காரியங்கள், ஜாக்கிரதையாகத் தேடாமல் கண்டறிந்து கொள்ள முடியாது. சிலர் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால் அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்" என்று தரப்பட்டுள்ள விளக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை விளக்கிச் சொல்வதற்கு கடினமானதாயிருக்கிற காலங்களும் இருக்கின்றன. வசனம் எபி. 5:14. "**பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே** (பயிற்சி செய்யப்பட்ட மனதின் திறமைகள் உள்ளவர்களுக்கே) **தகும்**." இது 2 பேது. 3:16–ல் பரி. பேதுருவின் வார்த்தைகளிலும் கூட சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது. அங்கே பரி. பவுலின் எழுத்துக்களுக்கு இசைவாக எழுதப்பட்டிருப்பதில், "**அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது, கல்லாதவர்களும்** (தேவனுடைய வார்த்தையை), **உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது** (உருக்குலைத்தல், திரித்துக் கூறுதல், தவறாக அர்த்தப்படுத்துதல்) **போலத் தங்களுக்குக் கேடுவரத் தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்**" என்று கூறுகிறார்.

பூமிக்கு அடியில் புதைந்துள்ள விலையேறப்பெற்ற உலோகத்தின் "நாளங்களைக்" கண்டறிவதற்கு விடாப் பிடியான மற்றும் மிகுந்த கவனத்தோடு தேடுதல் அதிகமான அளவில் தேவைப்படுவதைப் போலவே, தேவனுடைய வார்த்தையாகிய சுரங்கத்தில் மறைவாக புதைந்துள்ள விலையேறப்பெற்ற சத்தியத்தின் "நாளங்களைக்" கண்டுபிடிக்கவும் அதிகமான அளவில் விடாப்பிடியான

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

மற்றும் மிகுந்த கவனத்தோடு ஆராய்ந்து படித்தல் அவசியப்படுகிறது என்பதை அனுபவமானது தெளிவுபடுத்திக் காட்டுகிறது. மேலும் நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம் இதற்கு குறைவானதைச் சுட்டிக்காட்டவில்லை. ஒவ்வொரு உண்மையான பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனும் ஜாக்கிரதையோடு, கர்த்தர் அருளுகிற உதவிகளைப் பயன்படுத்தி (எபே. 4:13) "**வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பது**" (யோவா. 5:39; அப். 17:11) கடமையும், அதைப் போலவே சிலாக்கியமுமாயிருக்கிறது. நம்முடைய நாளில் நமக்கு இந்த உதவிகள் மட்டுமல்லாமல், கர்த்தர் ஏற்படுத்தி தந்த மானிட போதகர்களும் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அதோடுகூட நம்மிடம் பரோஷியா மற்றும் எபிஃபெனி புத்தக தொகுதிகள், USB தரவு சேமிப்பு சாதனத்திலுள்ள பைபிள் ஸ்டாண்டர்ட் களஞ்சியம் போன்றவைகளும் இருக்கின்றன. ஆம், நீதி. 4:18, இந்த முன்னேறிவரும் கருத்தை மிக அழகாக விளக்கிக் கூறுகிறது. "**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.**"

தேவனுடைய ஊழியக்காரர்களுடைய போதனைகளை மிகவும் நன்றாக, கவனத்துடன், "மனோவாஞ்சையாய்" ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு, பிரதிஷ்டை செய்த ஒவ்வொருவரும், தினந்தோறும் அப்படிப்பட்ட உபதேசங்கள் வேதாகமத்திலிருந்து வருகிறதா, இல்லையா என்றும், அதனுடன் இசைவாக இருக்கிறதா என்றும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் ஆவிகளை (உபதேசங்களை) சோதித்தறிய வேண்டும். "**எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.** (1 யோவா. 4:1; 1 தெச. 5:21). தளராத முயற்சியுடனும், கவனமாகவும் தேடுவதன் மூலமாக, விலையேறப்பெற்ற "வெள்ளியாகிய சத்தியத்தை" (மத். 7:7), மற்றவர்களுக்கு (மந்தமாகக் கேட்பவர்களுக்கு) மறைக்கப் பட்ட பொக்கிஷத்தை நாம் கண்டு கொள்வோம்; நாம் விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுதலைப் பற்றிய தேவனுடைய அமைப்பு முறையை படிப்படியாக அதிகமதிகமாகக் கண்டறிந்து கொள்ளுவோம். தேவன் மிக முழுமையாகவும், ஜாக்கிரதையாகவும் மறைத்து வைத்துள்ளவைகளை மட்டும் நம்மால் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் அது வெளிப்படுத்தப்படுவதற்கு (முன்னேற்றமடைகிற சத்தியம்) இன்னும் அவருடைய ஏற்றகாலம் வரவில்லை. உபா. 29:29; "**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள் வெளிப்படுத்தப்பட்டவைகளோ... நமக்கு... உரியவைகள்.**" (அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப் பட்ட, முழுமையாக பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைக்கு உரியவைகள்). ரோம. 16:25; கொலோ. 1:26-ஐயும் கூட பார்க்கவும். தேவனுடைய விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுகிற அமைப்பு முறையைப் பற்றி நாம் கண்டறிந்து படிப்படியாக கற்றுக் கொள்வோம்; தேவன் மிக முழுமையாகவும் கவனமாகவும் மறைத்து வைத்திருப்பது மட்டுமே நம்மால் கண்டறிய முடியாததாக இருக்கும், ஏனெனில் அவைகள் (முன்னேற்றமடைகிற சத்தியம்) வெளிப்படுத்தப்படுவதற்கான அவருடைய ஏற்ற சமயம் இன்னும் வரவில்லை.

நாம் அதனை அறிந்து கொள்வது சரியாக இருக்குமானால், தேவன் ஏன் சத்தியத்தை மறைத்து வைக்க வேண்டும் என்று இந்த கருத்துக்கள் ஒரு கேள்வியை எழுப்புகின்றன, இந்த நேரத்தில் அல்லது சமயத்தில் எல்லோரும் இதை அறிந்து கொள்வது, தேவனுக்குப் பிரியமானதல்ல, என்று நாங்கள் பதிலளிக்கிறோம். (ரோம. 11:32 உடன் ஒப்பிடுக). ஏனெனில் உலக ஞானமுள்ளவர்கள் தற்காலத்தில் நிகழ்கால சத்தியத்தைப் பெற்றுக் கொள்ளவும், அதனால் நன்மையடையவும் போதுமான மனத்தாழ்மை உள்ளவர்களாக இல்லை; அதிகரித்து வருகிற தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவு அவர்களுடைய குற்றத்தை அதிகப்படுத்துவதுடன், அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறதாயுமிருக்கும். எனவே தேவன் அதனை அவர்களிடமிருந்து மறைக்கிறார். "**பிதாவே வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை** (உலக) **ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு** (சாந்தகுணமுள்ள, மனத்தாழ்மையுள்ள, நம்புகிறவர்கள் - மத். 18:3,4) **வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.**" (மத். 11:25; லூக். 10:21).


மேலும் சத்தியத்தைக் குறித்த தேடுதல், நமக்கு நன்மை பயக்கும் பயிற்சியாகவும் அது கண்டுபிடிக்கப்படும் போது, நாம் அதை மதித்துணர்ந்து பாராட்டுவதற்கு காரணமாகவும் இருக்கும்படியாக அது மறைக்கப்பட்டுள்ளது. மேலும் அது தேவைப்படும் வரைக்கும் அதைக் கண்டு பிடிக்கக் கூடாதபடிக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. தேவன், "**ஏற்ற காலங்களிலே... பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்**" (தீத்து 1:4). பவுல் இந்த வார்த்தைகளை சபைக்கு கண்காணியாயிருந்த தீத்துவுக்கு (ஓர் முதிர்ந்த கிறிஸ்தவ குணாம்சமுடையவர்) எழுதினார். இந்த போதனைகள் பிரதிஷ்டை செய்த விசுவாசிகளைத் தவிர வேறெவருக்கும் உரியதாயிருக்கும்படி திட்டமிடப்படவோ அல்லது பயனுள்ளதாகவோ இல்லை. ஏனெனில் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விசேஷித்த விசுவாசம், மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் இது "**ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறது.**" (1 கொரி. 2:14).

வெள்ளியும், பொன்னும், நிலக்கரியும், எண்ணெயும், பூமியில் மறைவாக வைக்கப்பட்டிருந்தன, ஏனெனில், அவற்றை நாம் பெற்றுக்கொள்வது சரியானது அல்ல என்று ஒருவர் சொல்லலாம், அது போலவே தேவன் வேதாகமத்தில் சத்தியத்தை, மறைத்து வைத்திருக்கிறார். ஏனென்றால், நாம் விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுதலில், உண்மையான அல்லது வெளிப்படையான ஒரு அமைப்பு முறையைப் பெற்றுக் கொண்டிருக்க விரும்பவில்லை என்று ஒருவர் சொல்லலாம். ஏற்ற காலத்து சத்தியமானது, (நிகழ்கால சத்தியம்) ஜாக்கிரதையாகத் தேடுவதன் பலனாக மட்டுமே கண்டடையப்பட முடியும்; அத்துடன் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருப்பவர்களால் மட்டுமே அது கண்டடையப்பட்டு, அவர்களுக்குள் தக்க வைத்துக் கொள்ளப்படுகிறது: பயபக்தி (சங். 25:14; 111:10) சரியான மனத்தாழ்மை (யாக். 4:6; 1 பேது. 5:5,6); சாந்தகுணம் (சங். 25:9), நீதியின்மேல் பசிதாகம் (மத். 5:6), உண்மையும் நன்மையுமான இருதயம் (லூக். 8:15), மற்றும் பரிசுத்தம். "**பரிசுத்தமில்லாமல் ஒருவனும்**

**கர்த்தரை தரிசிப்பதில்லையே**" (எபி. 12:14; மத். 5:8; சங். 97:11). தேடுவதற்கு ஜாக்கிரதையுடன் யாரெல்லாம் வாஞ்சையோடும், மெய்யான ஆர்வத்தோடும் இருக்கிறார்-களோ, அவர்கள் மட்டுமே தேவனுடைய வார்த்தையில் உள்ள விலையேறப்பெற்ற ஞானத்தைக் கண்டடைவார்கள். அவை "**மண்குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது.**" (சங். 12:6). "**அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும் பொன்னிலும் உத்தமமானது.**" (நீதி. 3:13-15).

ஆனால், சுவிசேஷ யுகம் முழுவதுமாக, நாம் விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுதல் பற்றிய மெய்யான ஒழுங்குமுறை அமைப்பைக் கொண்டிருக்கிறோமா என்ற கேள்வி கேட்கப்படலாம் - வேறு என்ன அதிகமாக நமக்கு தேவைப்படுகிறது? நம்முடைய பிதாக்கள் அதனைப் புரிந்து கொள்ளவில்லையா? ஜாக்கிரதையுடன் தேடி, இருதயத்தில் பெறக்கூடிய சரியான மனப்பான்மையில் இருந்தவர்கள், தங்களுடைய நாளில் தாங்கள் அறிந்து கொள்ளத் தேவையானது எதுவோ அதைப் (நிகழ்கால சத்தியம்) பெற்றுக் கொண்டார்கள்; ஆனால் அவர்களுடைய நாளில் பெற்றுக் கொள்ளப்பட்டவைகள் நம்முடைய நாளில் (முன்னேறிக் கொண்டிருக்கும் சத்தியம்) நாம் அறிந்து கொள்வதற்கு அது போதுமானதாக இல்லை. நோவாவின் நாளில் இருந்த சத்தியத்தைக் காட்டிலும், ஏதோ கொஞ்சம் அதிகமானது, ஆபிரகாம் அல்லது யோவான் ஸ்நானனுக்கு அவர்களுடைய நாளில் அறிந்து கொள்ள போதுமானதாக இருந்தது அல்லது அமெரிக்காவை கண்டுபிடித்த காலத்தின் போது உலகத்தில் கிடைக்கப் பெற்ற வெள்ளியையும், பொன்னையும் காட்டிலும், ஏதோ கொஞ்சம் அதிகமாக, இந்நாளில் உலகத்திற்கு கிடைப்பது போதுமான-தாயிருக்கிறது. நம்முடைய பிதாக்கள், தேவனுடைய வார்த்தையின் சத்தியத்திற்காக அதே சுரங்கத்தில் உழைத்தார்கள், ஆனால் அவர்கள் கிடைத்ததை பயன்-படுத்தித் தீர்த்துவிடவில்லை - தேவனுக்கு ஸ்தோத்திரம்! சுத்தப்படுத்தப்படாத அடையாளமான தங்கம் மற்றும் வெள்ளியாகிய சத்தியங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன. நம்முடைய நாளிலும்கூட (நீதி. 4:18; 1 ராஜா. 10:22; 2 நாளா. 9:21; PT'54, பக்கம் 60, பத்தி 4) "**நீதிமானுக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது**" (சங். 97:11). மேலும், "**சகோதரரே, ..... நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்-களல்லவே.**" (1 தெச. 5:4).

இயேசு எருசலேமைப் பார்த்து அழும் போது, நிகழ்கால சத்தியத்தை அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை (2 பேது. 1:12) வலியுறுத்தினார். "**உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும், உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக் கிறது**" என்று கூறினார். (அவர்கள் தேவனுடைய பூமிக்குரிய போதகரைப் புறக்கணித்துவிட்டார்கள்) (லூக். 19:41,42). சத்தியத்தைப் பெற்றிருப்பவர்கள் என்று அறிக்கை செய்தாலும் அவர்கள் சரியான வழியிலும் சரியான ஆவியிலும் அதைத் தேடுவதைப் புறக்கணித்துவிட்டனர்.




(அவர்களுடைய வீடு அவர்களுக்கு பாழாக்கி விடப்பட்டது. தேவன் சுவிசேஷ யுகம் முழுவதும் அவர்களைக் கைவிட்டார்). அவர்களுடைய சந்திப்பின் நாளை அவர்கள் அறியாதிருந்-தனர். (வசனம் 44). (அவர்கள் கர்த்தரை சிலுவை-யிலறையும்படி அவருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டினர்). ஆம், "**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.**" (யோவா. 1:5). இப்போது சுவிசேஷ யுகமும் ஆயிரவருட யுகமும் கவிந்து வருகிற இன்றைய நாளிலும் "**நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு**" (2 தீமோ. 2:15) என்ற அப்போஸ்-தலருடைய புத்திமதியை நாம் மிகவும் எச்சரிக்கையுடன் கவனிப்பது அநேகமாக முன்பிருந்ததைவிடவும் அதிக முக்கியமானதாயிருக்கிறது.

சுரங்க வேலை செய்கிற மனுஷர் பொதுவாக தங்கள் தலைகளின் மீது விளக்குகளைப் பொருத்திக் கொண்டு, தாழக் குனிந்தும் சில சமயங்களில், நெடுஞ்சாண் கிடையாய் விழுந்தும் மறைந்திருக்கிற பொக்கிஷத்தைத் தேடுகின்றனர். நாமும் மனத்தாழ்மையுடன் தேவனுடைய பரிசுத்த ஆவியால் நம்முடைய மனங்களை ஒளியூட்டுவது அவசியமாயிருக்கிறது. (1 கொரி. 2:9-16). யோவான் 9-ம் அதிகாரத்தில் - அந்த குருடனாயிருந்த மனிதன் தன்னுடைய பார்வையை அற்புதமாக பெற்றபோது, பரிசேயர்கள் வெளிச்சத்தைப் புறக்கணித்து, சத்தியத்தை இகழ்ச்சி செய்ததில் அவர்களின் பங்காக நாம் காண்கிறோம்; ஏனெனில் அவர்களுடைய கிரியைகள் பொல்லாங்கானதாயிருந்தன. நம்முடையவைகளும் சில வகையில் குருடனாயிருந்த மனிதனின் காரியங்களுக்கு ஒத்ததாயிருக்குமானால் நாம் ஆச்சரியப்படவேண்டாம். அவன் இயேசுவிடம் கொண்டிருந்த தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டபோது பரிசேயர்கள், "**நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ?**" (யோவா. 9:34) என்று கேட்டார்கள். அந்த குருடனாயிருந்த மனிதன் அமைதியாயிருந்து, தன்னுடைய இருதயத்தில் விசுவாசித்து, சபையில் தன்னுடைய நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்திருந்தானானால், அது கோழைத்தனமாக இருந்திருக்கும். இயேசுவுடன் அவனுக்கு அடுத்தபடியாக கிடைத்த ஐக்கியத்தை இழந்திருப்பான். தேவனிடத்தில் தங்களைப் பிரதிஷ்டை செய்கிறவர்கள், இந்தப் பார்வையற்றிருந்த மனிதனைப்போல, கர்த்தருடைய பிரசன்னத்தை அறிந்துணர்வதற்கும், வெளிச்சம் மற்றும் சத்தியத்தின் ஆசீர்வாதத்துக்கும் நம்முடைய கண்கள் திறக்கப்பட்டிருப்பதால், நிச்சயமாக, "**நான் குருடனாயிருந்-தேன், இப்பொழுது காண்கிறேன்**" (யோவா. 9:25) என்று

நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆம், நாம் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறோம்.

மனிதர்கள் சுரங்கத்தில் வெள்ளியைக் கண்டு பிடிக்கும்போது, அது தங்களுக்குள் பிரயோஜனமுள்ள அல்லது பிரயோஜனமில்லாத மற்ற பொருட்களிலிருந்து பிரித்தெடுக்கப்படாத வரைக்கும் அந்த இரண்டு காரிய வகையிலும் விலையேறப்பெற்ற உலோகத்தின் மதிப்பிலிருக்கும் தரத்தை குறைத்துவிடும். ஆகவே நாம் சத்திய வார்த்தையை சரியாகப் பிரித்தெடுப்பது மட்டுமல்லாமல், அதிலிருந்த விலகிச் செல்லும் அனைத்தையும் கவனமாக பிரித்தெடுக்க வேண்டும், இல்லையெனில் பயனுள்ளதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதிலிருக்கும் தரம் குறைவுபடும். "**பொல்லாப்பை விட்டு நீங்கி,**" "**தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்** (விரும்பி) **கொண்டிருங்கள்**" (1 பேது. 3:11; ரோம. 12:9).

அடையாளமான "**தூதர்களின் ஆகாரமான**" நிறைவேறுதலான மன்னாவாகிய (யோவா. 6:31-35; சங். 78:25) "தேவனுடைய நல்வார்த்தையை (எபி. 6:5) ருசி - பார்த்தவர்களாகிய நாம் ஏற்ற காலத்தில் தொடர்ந்து போஷிக்கப்பட வேண்டியவற்றில் சோர்ந்து போகாதிருப்போமாக. நாம் அடையாளத்தில் உண்மைத்துவமில்லாதிருந்த இஸ்ரயேலர்களைப் போல இருக்கக்கூடாது. (எண். 11:4-6). சிலர் செய்கிறது போல இருதயத்திலும், மனதிலும் வேறு ஆகாரத்தை பெரிதும் விரும்ப ஆரம்பிக்கவும் கூடாது. பரிசுத்தப்படுத்தும் சத்தியத்துக்குப் (யோவா. 17:17) பதிலாக நிறைவேறுதலான எகிப்தாகிய இப்போதிருக்கிற பொல்லாத உலகத்தின் ஆகாரங்களான தப்பறை (மீன்), உலக வரலாறு (வெள்ளரிக்காய்கள்), உலகப் பிரகாரமான விஞ்ஞானம் (கொம்மட்டிக் காய்கள் - 1 தீமோ. 6:20 உடன் ஒப்பிடுக), லௌகீக ஞானம் (கீரை வகைகள் - கொலோ. 2:8 உடன் ஒப்பிடுக), கலை (வெங்காயங்கள்) மற்றும் இலக்கியம் (வெள்ளைப் பூண்டு) போன்றவைகளும் அதன் அமைப்புகளும் சேர்ந்த ஆகாரங்கள் மீது நாம் ஆசை கொள்ளாதிருப்போமாக. "**பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாகவும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.**" (யாக். 3:17).

நீதி. 2:4,5-ல் உள்ள நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம், ஞானத்தை நாம் ஜாக்கிரதையுடன் தேடுவதன் பலனாக, நாம் யேகோவா தேவனிடம் பயபக்தியுடனிருப்பது இன்னதென்று புரிந்து கொண்டு, தம்மைப்பற்றி அறிவதே நித்திய ஜீவன் என்ற தேவனை அறியும் அறிவையும் (சத்தியம்) கண்டடைவோம் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. (யோவா. 17:3; 1 யோவா. 5:20). அப்படியானால் மெய்யான ஞானத்தை நாம் ஆராய்ந்து தேடுவது எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது! இது யோபு 28-ம் அதிகாரத்தில் நன்கு வலியுறுத்தப்படுகிறது. (E.Vol.1, பக்கம் 577, 578 உடன் ஒப்படுக). "**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.**" (யோவா. 4:24).




மெய்யான ஞானத்தையும், விசுவாசம் மற்றும் தொழுது கொள்ளுதல் பற்றிய மெய்யான ஒழுங்கமைப்பு முறையையும் கண்டடைந்த பின்பு, முடிவு வரை உண்மையுடன் நாம் அதை உறுதியாக பற்றிக் கொண்டவர்களாக, சத்திய வெளிச்சத்திலும், அதன் ஆவியிலும் தொடர்ந்து நடந்து, அவற்றை நம்முடைய விரல்களில் கட்டினவர்களாக (நம்முடைய செயல்பாடுகளில் அவற்றை எழுதிக் கொண்டு) நம்முடைய விருப்பங்கள் மற்றும் சித்தத்திற்குள்ளாக அவற்றைச் செதுக்கி பொறித்து வைத்துக் கொள்வோமாக. (நீதி. 7:3).

எங்களின் இரண்டாவது வேதபகுதியான, எபி. 5:10,11-வசனங்கள், பிரதான ஆசாரியராக கீழ்ப்படிதல் என்னும் அவருடைய பாடத்தினால் பரிபூரணமாக்கப்பட்டவராகிய இயேசுவைக் குறித்துப் பேசுகிறது. வலிநிறைந்த ஒழுக்கப் பயிற்சியின் பாடுகளின் மூலமாக பரிபூரணமாக்கப்பட்ட அவர் இப்போது பிரதான ஆசாரியருடைய உத்தியோகத்தை நிரப்புவதற்கு பொருத்தமானவராயிருக்கிறார். எந்த சந்தர்ப்பத்திலும் பாவம் என்னும் அர்த்தத்தில் இயேசு அபூரணராக இருந்தார் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. அவருடைய பரிபூரணமானது, ஞானஸ்நானத்தில் ஜெனிப்பிக்கப்பட்டு, வளர்ச்சி அவசியப்பட்ட புதிய இயல்புடையதாக அல்லது புதிய சுபாவமுடையதாக இருந்தது; இப்படியான நோக்கத்திற்காகவே, சோதனைகளும், கஷ்டங்களும், அடிகளும் அவருக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டன. அவர் நிரூபிக்கப்பட வேண்டியவராக இருந்தார்; "**தன் சிலுவையை சுமந்துக் கொண்டு எனக்கு பின்செல்லாதவன் எனக்கு சீஷனாக இருக்கமாட்டான்**" (லூக். 14:27) என்ற முழுமையான அறிவின் கீழாக கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருக்கும் பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் இது பொருந்தும்.


## சத்தியத்தை தேடுகிறவர்களும் கூட தோல்வியடையலாம்

"**மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனால் அறிவிக்கப்பட்டிருக்கிறதினால்: அவரைக் குறித்து எங்களின் பிரசங்கத்தில் விஸ்தாரமாக பேச வேண்டியதிருக்கிறது, நீங்கள் மந்தமாக கேட்கிறவர்களாகிவிட்டபடியினால் அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கிறது.**" (எபி. 5:10,11 டயக்லாட்)

அறிவில் வளர்ச்சியடைவது முக்கியமானதாயிருக்கிறதா? நிச்சயமாகவே! சிலர் சத்தியத்தை தேடுவதில், மந்தமான செவியுடையவர்களாக மாறுவதினால் விடாமுயற்சியுடன் செயல்படத் தவறுகிறார்கள். கிறிஸ்துவை

முதன்முதலில் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து வரும் சமயங்களில், அறிவில் முறையாக வளர்வதில், அவர்கள் (பல சந்தர்ப்பங்களில் தங்கள் போதகர்களிடமிருந்து) கிருபையின் வளர்ச்சியிலும், தேவனுடைய அன்பிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அறிவில் வளர்வது முக்கியமல்ல என்ற தவறான கருத்தை அல்லது யோசனையை பெற்றுள்ளனர். இந்த யோசனை ஒரு மாயையாயிருக்கிறது! கிருபையில் வளர்வதற்கும், அறிவில் வளர்வதற்கும் இடையில் இது உண்மையாயிருக்கிறது, கிருபையில் வளர்ச்சியடைவதே மிகவும் முக்கியமான–தாயிருக்கிறது. கிருபையில் அதற்கேற்ற வளர்ச்சி இல்லாமல் அறிவில் அதிகமான வளர்ச்சி இருந்ததானால், நாம் முறைமையற்ற விதத்தில் வளர்ச்சியடைந்தவர்களாக சரிசமநிலையற்ற விதத்தில் வளர்ச்சியடைந்தவர்களாக இருப்போம். "**அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்தி விருத்தியை** (கட்டியெழுப்புவதை ; டயக்லாட்) **உண்டாக்கும்.**" (1 கொரி. 8:1; 13:2). ஆனால், இது அறிவில் வளர்வதை முக்கியமற்றது என்பதாக அர்த்தப்படுத்தாமல், அதை வழங்குவதில் கிருபையில் வளர்வதோடு இணைந்திருக்கக் கூடியதாக அல்லது சேர்ந்திருக்கக் கூடியதாக இருக்கிறதை அர்த்தப்படுத்துகிறது.

சத்தியத்தை தேடுகிறவர்களாக விடாமுயற்சியுடன் இருப்பதற்கு, அறிவில் வளர்ச்சியடைவதின் முக்கியத்–துவத்தை வேதவாக்கியங்கள் எவ்வளவாய் வலியுறுத்து–கின்றன என்பதைக் கவனியுங்கள். உதாரணமாக, பரிசுத்த பவுல் கிறிஸ்தவர்களுக்காகப் பின்வருமாறு ஜெபித்தார்: மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்–தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும் (வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உங்களின் அறிவின் மூலமாக, சத்தியம் மற்றும் தப்பறைகளுக்கிடையிலான–வைகளை கண்டறிய முடியும் என்பதை உதாரணப் படுத்தலாம்), (பிலி. 1:9,10 டயக்லாட்); "**சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும்**" (கொலோ. 1:10) வேண்டுமென்று ஜெபித்தார். "**தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.... உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தை–யும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும்** (பயனற்றவர்களாய் – மார்ஜின் குறிப்பை பார்க்கவும்) **கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள்** (அறிவு உட்பட) **இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்–போன குருடனாயிருக்கிறான்.... அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும்**




**அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்**" என்று பரிசுத்த பேதுரு எழுதியிருக்கிறார். (இவ்வாறாக ஒருவர் அறிவிலும், கிருபையிலும் முறையாக வளர்ந்தால், அவர் தப்பறையில் வழிதவறிவிடமாட்டார்) (2 பேது. 1:2,5,8,9; 3:17,18).

## ஆக்கப்பூர்வமாக முன்னேறிக் கொண்டிருக்கிற சத்தியம் அவசியம்

தேவனுடைய வார்த்தையிலிருந்து வெளிப்படும் சத்தியமானது வளராமல் நிலையிருப்பதல்ல; அது முன்னேற்றமடைந்து கொண்டேயிருக்கிறது; இருண்ட யுகத்தின் எந்த ஒரு கிறிஸ்தவ மத கோட்பாட்டின் எல்லைக்குள்ளும் அது ஒன்றிணைக்கப்படவில்லை, அது மட்டுமல்லாமல், கடந்த காலத்தின் அனைத்து கிறிஸ்தவ மத கோட்பாடுகளையும் ஒன்றிணைத்தாலும் நம்முடைய நாட்களுக்குரிய சத்தியத்தை நமக்கு தர முடியாது. சத்தியத்தின் பல அம்சங்கள் களஞ்சியமாக தேவனுடைய வார்த்தையிலிருந்து வெளி வருகின்றன. சமயக்கோட்பாடு–கள் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே பல ஆண்டுகளாக வெளிவருகின்றன, அவைகள் நம்முடைய நாட்களில் தொடர்ந்து வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. அவை–களுக்கு இணக்கமாக இருப்பதே நம்முடைய கடமையும் சிலாக்கியமுமாக இருக்கிறது. பல ஆண்டுகளாக நம்பப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வந்த கோட்பாடுகள் நம்முடைய நாட்களில் அதிகரித்த வெளிச்சத்தில் இன்னும் இன்னும் தெளிவடைகின்றன. தேவனுடைய களஞ்சிய–மானது "சிந்திக்கிற கிறிஸ்தவர்களுக்கான ஆகாரமாக" தொடர்ந்து நிறைந்திருக்கிறது.

நம்முடைய போதகர் பரோஷியா தொகுதி–1, பக்கம் 24, பரோஷியா தொகுதி–2, பக்கம்–28–ல் தெரிவிக்கிறது போல, இருண்ட காலங்களில் வகுக்கப்பட்ட எந்தவொரு கோட்பாடுகளுடனும் அல்லது எந்தவொரு நவீன பிரிவின் கொள்கைகளுடனும் எவராவது தன்னைப் பிணைத்துக் கொண்டு, அதன் பிறகு காலம் முன்னேற்றமடையும் போது வேதவாக்கியங்களிலிருந்து மேலும் வெளிச்சத்தை தேட மறுப்பது எவ்வளவு முட்டாள்தனமானதாயிருக்கிறது. யாரெல்லாம் "அவர் (தேவன்) எங்கே வழிநடத்திச் சென்றாலும் அவரை பின்தொடர்வேன்" என்றும், "என் இரட்சகர் என்னை வழி நடத்தும் எல்லா வழிகளிலும்" என்றும் பாடுகிறார்களோ, அவர்கள் பின்பற்றவும் தயாராக இருக்க வேண்டும். ஒரு முட்டாள் தனமான மனிதன் மட்டுமே எல்லா சத்தியங்களையும் ஒரே பொதியுறையில் (Capsule) இருந்து வசப்படுத்திக் கொண்டதாக நினைப்பான், பின்னர்

கால முன்னேற்றங்களின்படியான மேம்படுகிற சத்தியத்தை தேடுகிறதையே நிறுத்திவிடுகிறான்.

தற்பொழுது, நம்முடைய நாட்களில் தேவனுடைய பிள்ளையானவன் முன்னேற்றமடைகிற சத்தியத்தைப் பெறுவதற்காக சொப்பனங்கள், தரிசனங்கள், மனதில் ஏற்படும் பதிவுகள் போன்றவைகளையோ சார்ந்திருக்க-வில்லை. அதற்கு மாறாக, அப்.பேதுரு கூறுகிறார், "**அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு. பொழுதுவிடிந்து விடிவெள்ளி உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்**" (2 பேது. 1:19). இதை போலவே, சங்கீதக்காரரும் கூறுகிறார், "**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமு-மாயிருக்கிறது.**" (சங். 119:105).

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் "ஒளியில் நடப்பதற்கான " (1 யோவா. 1:7) தேவையையும், சிலாக்கியத்தையும் உடையவர்களாயிருக்கிறார்கள், அதா-வது ஒளியுடனே கூட தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும். இல்லையெனனில், அதனுடைய முன்னேற்றத்-தில் அது நிற்காது, அது நம்மை இருளில் விட்டுவிட்டு, முன்னோக்கிக் கடந்து சென்றுவிடும். அநேகருக்கு இருக்கக்கூடிய கஷ்டம் என்னவெனில், ஒளியின் பாதையை பின்பற்றாமல் அவர்கள் அமர்ந்து விடுகிறார்கள், "**நீங்கள் மந்தமாக கேட்கிறவர்களாகிவிட்டீர்கள்**" (எபி. 5:11, டயக்லாட்)

எழுத்தாளரும், நகைச்சுவையாளரும், விரிவுரை-யாளருமான மார்க் ட்வைன், சராசரியாக சத்தியத்தை தேடுகிறவர்களின் நடைமுறையை நன்றாக விவரித்-துள்ளார், சத்தியம் என்பதாக எது கவர்ந்திழுக்கப்படுகிறதை கண்டடையும் வரை தேடுகிறவன், அதன் பிறகு அந்த சத்தியத்தின் கூடுதலான வெளிப்பாடுகளைப் பொருட்-படுத்தாமல் அதையே விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்கிறான் என்கிறார். அவருடைய எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்ட பின்வருவனவற்றைக் கவனியுங்கள்: "ஒரு மனிதனுடைய மதச் சிக்கலை நீங்கள் அறிந்திருக்கையில், அவர் எந்த விதமான புத்தகங்களை படிக்கிறார் என்றும் அவருக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக வெளிச்சம் தேவைப்படும் போது எந்த வகையான புத்தகங்களை படிக்கவில்லை என்பதும், உங்களுக்குத் தெரியும், தற்செயலாகவே, அவர் விரும்புவதை விடவும் அதிகமான வெளிச்சத்தைப் பெறுகிறார்.... அவர்கள் விடாமுயற்சியுடனும், விடாப்பிடி-யுடனும், கவனமாகவும், எச்சரிக்கையாகவும், ஆழமாகவும், பரிபூரண நேர்மையுடனும், நேர்த்தியாக சரிசெய்யப்பட்ட தீர்ப்புடனும் தேடினார்கள் – அதாவது, சந்தேகமோ அல்லது கேள்வியோ இல்லாமல், சத்தியத்தைக் கண்டுபிடித்து-விட்டதாக நம்பும் வரைக்கும் அவர்கள் தேடினார்கள். அதுவே தேடுதலின் முடிவாக இருந்தது. அந்த மனிதன் தனது எஞ்சிய வாழ்நாட்களை, தட்ப வெட்ப சூழல்களிலிருந்து தன்னுடைய சத்தியத்தை பாதுகாப்பதற்காக கூழாங்-கற்களை வேட்டையாடுவதிலேயே கழித்தார்.

உண்மையாகவே பல நேர்மையான மனிதர்கள் மேற்கொண்ட போக்கின் உண்மையான விளக்கம் இதுதான். அநேகர் தாங்கள் பிறந்து வளர்ந்த பிரிவுகளிலேயோ அல்லது ஸ்தாபனங்களிலேயோ தங்கியிருக்கிறார்கள், மேலும் அதிகமான சத்தியத்தை தேடாமலும், பல சந்தர்ப்பங்களில் தாங்கள் இணைந்திருக்கும் இவ்வாறான கோட்பாட்டு உபதேசங்களை ஆராயாமலும், இவ்வாறாக, அவைகளுக்கு அறியாமையினால் ஒப்புதல் அளிக்கிறார்கள். நமது புரோட்டஸ்டெண்ட் முன்னோர்கள் இதை விடவும் சிறந்த நிதானிப்பையும் தேவனுக்கும் அவருடைய பரிசுத்த வார்த்தைக்கும் அதிக விசுவாசத்தை-யும் அப்பியாசித்திருக்கவில்லையெனில், அவர்கள் போப்பு மார்க்கம் மற்றும் ரோமானிய குருத்துவ படிநிலையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து, கன்னி மரியாளிடம் ஜெபித்துக் கொண்டு, பெரிய அந்திக்கிறிஸ்து முறைக்கு மரியாதை செலுத்திக் கொண்டிருந்திருப்பார்கள் – "**பாவ மனுஷன் அக்கிரமத்தின் இரகசியம்.... அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்.**" (2 தெச. 2:3-8).

மற்றவர்கள் மேலே விவரிக்கப்பட்டபடியாக, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேலாகவும் சத்தியத்தை தேடு-கிறார்கள், என்றாலும் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு மேல் விசாரிக்கிறதில்லை. அவர்கள் கிறிஸ்தவின் பாடசாலையில் முதல் வகுப்பிலிருந்து இரண்டாம் வகுப்புக்கு முன்னேறக்-கூடும், ஆனால் உயர் வகுப்புகளுக்கு செல்லாமல், அங்கேயே தொடர்ந்து இருப்பதில் திருப்தியடையக் கூடும், இதனால், அவர்கள் ஒரு போதும் தேவனுடைய வார்த்தை-யின் "பலமான ஆகாரத்தை" அனுபவிக்க மாட்டார்கள். அவர்கள் ஒருபோதும் "வளராமல் முதிர்ச்சியற்ற கிறிஸ்தவர்-களாக, தங்கள் வளர்ச்சியில் குன்றியவர்களாகவே எப்போதும் நிலைத்திருக்க உறுதியாக இருக்கிறார்கள். அப்போஸ்தலன், தன்னுடைய நாட்களில் இதுபோன்ற சிலரிடம் பேசினார், அவர்களை கேள்வியில் மந்தமுள்ள-வர்கள் என்று கண்டித்துக் கூறினார்." "**காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு, தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது: நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை-யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். ஆகையால், கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, பூரணராகும்படி கடந்து போவோமாக.**" (எபி. 5:11-6:2).

ஒரு கட்டிடத்தைக் கட்ட விரும்பும் மனிதன் எப்பொழுதுமே அடித்தளக்கற்களை நாட்டிக் கொண்டும், அதையே சார்ந்தும் இருந்துக் கொண்டு, ஒரு போதும் மேல்கட்டுமானத்தை முன்னேற்றவில்லையெனில் அவன் மிகவும் முட்டாள்தனமானவன் என்று கருதப்படுவான்.


அஸ்திரபாரத்தை கவனமாக அமைப்பது முக்கியமானதாயிருக்கிற அதே வேளையில், முறையான மேம்பாடடையச் செய்யும் கிறிஸ்தவனாகிய ஒருவன் அங்கேயே நிற்கமாட்டான்; “**செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல்**” (எபி. 6:1,2) என்று கூறப்பட்டுள்ளது. முதல் நியமங்களை தனக்குக் கற்பிப்பதற்கு யாராவது மீண்டும் மீண்டும் அவசியப்படுவதற்குப் பதிலாக, சரியான வளர்ச்சியுடன் இந்த அடிப்படை கோட்பாட்டுபதேசங்களை மற்றவர்களுக்கு கற்பிக்கக்கூடிய காலம் வர வேண்டும்.

கிறிஸ்துவை முதன் முதலில் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து வருகிற நேரத்தில், சத்தியத்தை தேடுகிறவர்களாக விடாமுயற்சியுடன் வளரவும், அறிவில் முறையாக வளரவும் பலர் தவறியதிற்கான ஒரு காரணம் என்னவெனில், அவர்கள் (பல சந்தர்ப்பங்களில், தங்கள் போதகர்களிடமிருந்து) கிருபையின் வளர்ச்சியிலும், தேவனுடைய அன்பிலும், தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அறிவில் வளர்வது முக்கியமல்ல என்ற தவறான யோசனையை பெற்றிருப்பதுதான். இந்த யோசனையானது ஒரு மாயையாகவும் கூட இருக்கிறது! கிருபையில் வளர்வதற்கும், அறிவில் வளர்வதற்கும் இடையில் இது உண்மையாயிருக்கிறது, கிருபையில் வளர்ச்சியடைவதே முக்கியமானதாக இருக்கிறது. கிருபையில் அதற்கேற்ற வளர்ச்சியில்லாமல், அறிவில் அதிகமான வளர்ச்சி இருந்ததானால், நாம் முறைமையற்ற விதத்தில் வளர்ச்சியடைந்தவர்களாகவும் சரிசம நிலையற்ற விதத்தில் வளர்ச்சியடைந்தவர்களாகவும் இருப்போம். “**அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்தி விருத்தியை** (கட்டியெழுப்புவதை - ARV மார்ஜின் குறிப்பை பார்க்கவும்; டயக்லாட்) **உண்டாக்குகிறது.**” (1 கொரி. 8:1;13:2). அதற்காக, இது அறிவில் வளர்வதை முக்கியமற்றது என்பதாக அர்த்தப்படுத்தாமல், அதை வழங்குவதில் கிருபையில் வளர்வதோடு சேர்ந்திருக்க வேண்டும் என்பதை அர்த்தப் படுத்துகிறது.

## ஆறு சொற்கள்

### “சத்தியத்தில் நிலைத்து இருத்தல்” – “சத்தியத்தை பெற்று இருத்தல்”

சத்திய எழுத்துக்களின் பல்வேறு இடங்களில் பொதுவான கோட்பாட்டு விளக்கங்களும், பொருத்தமான அறிவுரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்டுள்ளபடி, பைபிள் ஸ்டாண்டர்ட் மினிஸ்ட்ரீஸ் [LHMM]-னுடைய ஆதரவின் கீழாக பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் நம்முடைய பேச்சு வழக்கில் நாம் பொதுவாக பயன்படுத்துகிற பொதுவான சொற்றொடர்களை உருவாக்கியுள்ளனர்.




இது ஒரு கேள்வியை எழுப்புகிறது! “நான் சத்தியத்தில் இருக்கிறேன் அல்லது என்னிடம் சத்தியம் இருக்கிறது” என்று நான் சொல்லும்போது, நான் மகிழ்ச்சியடைவதைத் தவிர்க்க முடியாது, என்னுடைய முந்தைய அபிப்பிராயங்களில் சிலவற்றை வருத்தப்படுத்துவதற்கோ அல்லது என்னுடைய பூமிக்குரிய ஆர்வங்களில் சிலவற்றிற்கு எதிரான நிலையை எடுப்பதற்கோகூட என்ன விலை கொடுப்பதாயிருந்தாலும் இந்த வார்த்தைகளை உறுதியாக கடைபிடிக்கிறேன் என்று என்னால் சொல்ல முடியுமா? எது என்னுடைய புத்தியுள்ள ஆராதனை? என்று நான் கேட்கும்பொழுது, ரோம. 12:1-ல் யேகோவா தேவன் இந்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கிறார், “**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**” ரோமர் 12-ல் அப்போஸ்தலன் புறஜாதியாராக இருந்தவர்களை நோக்கி பேசுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே தங்கள் சரீரங்களை தேவனுக்குப் பரிசுத்தமும் பிரியமுமான ஜீவ பலிகளாக ஒப்புக் கொடுக்கும்படி அவருக்கு செவிகொடுக்கிறவர்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

அப்போஸ்தலன் யாரை நோக்கி பேசுகிறார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது! அவர் இந்த வார்த்தைகளை உலகத்திற்கு அல்ல, விசுவாசிகளுக்கே அறிவுரையாகப் பயன்படுத்துகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிருபத்தின் முன்னுரையானது, அது ஏற்கனவே பிரதிஷ்டை செய்தவர்களுக்கே எழுதப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆம்! கர்த்தரைப் பற்றிய அறிவிற்கு வந்திருந்த விசுவாசிகளாயிருந்த சிலர் சுயத்தை ஜீவ பலியாக கொடுப்பதைக் குறித்து எண்ணிப்பார்த்தவர்கள் என்றாலும், தங்களைக் கர்த்தருக்கென்று முழுவதுமாக கொடுக்காதவர்கள், முழுமையான அர்த்தத்தில், இனிமேல்தான் சத்தியத்தில் நிலைத்திருக்கிற சகோதரராக மாற வேண்டியவர்களாக இருக்கக் கூடும். ரோம. 12:1-ல் உள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகள் தங்கள் சரீரங்களை ஜீவ பலிகளாக கொடுத்தவர்களுக்கும், அவ்வாறு செய்ய நினைப்பவர்களுக்குமானதாக இருக்க வேண்டும். சகோதரரே, கர்த்தருக்கு உங்களை ஏற்கனவே கொடுத்துவிட்டீர்கள்,

நீங்கள் உங்கள் பிரதிஷ்டையின் பொருத்தனையை நிறைவேற்ற வேண்டுமாறு நான் புத்தி சொல்கிறேன் என்று சொல்வது முழுமையாகவும், மிகவும் பொருத்தமானதாகவும் இருந்திருக்கும், ஏனெனில் உங்கள் சரீரங்கள் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான பலிகளாயிருக்கின்றன. ஆம், பிரதிஷ்டை செய்த மனுஷன் நியாயமற்ற பிடிவாதக்காரனல்ல, அவன் எளிமையான விசுவாசத்தில், தேவனுடைய அதிகாரத்தில், தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிறான். இப்பொழுது, “சத்தியத்தை பெற்றிருக்கிறவர்கள்,” தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்வதில் தங்கள் பிரதிஷ்டையின் நடையில் முன்னேறிச் சென்று தேவனுக்கு முன்பாக மிகவும் பிரியமானவர்களாக இருக்க முடியும்.

அற்பமான எந்த விஷயத்தாலும் தேவன் கோபங்கொள்ளும்படி தூண்டப்படமாட்டார் என்பதால் நாம் எவ்வளவு பாக்கியசாலிகளாயிருக்கிறோம். அவர் இருதயத்தையே பார்க்கிறார். நாம் எவ்வாறாக இருப்பினும் இருதயத்தை ஆராய்ந்து அறிய முடியாது, மேலும் நம்முடைய நியாயத்தீர்ப்பின் தராசு மிகவும் மோசமானதாயிருப்பதால் பொதுவாக நாம் மிகவும் அவசரப்படுகிறவர்களாய் இருக்கிறோம். நம்மில் மிகச் சிலரே நம்மையும் மற்றும் சத்தியத்தைப் பெற்றிருக்கிறவர்களையும், சுற்றியிருக்கிறதான முழுமையான சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்கிறவர்களாயிருக்கிறோம்; எனவே, அறிவிலும், கிருபையிலும் உள்ள வளர்ச்சி ஒவ்வொருவராலும் வெளிக்காட்டப்படுகிற அன்பின் அளவைப் பொறுத்தே இருக்கும். மேலும் நாம் நல்ல தத்துவங்கள் நிறைந்த அன்பாகிய தன்னலமற்ற அன்பில் வளருவதால், நாம் அதிகமதிகமாக தேவனைப் போன்று, “***சந்தோஷத்தோடே*** **கூடிய எல்லாப் பொறுமையும், நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்பட்டவர்களாவோம்.**” (கொலோ. 1:11). அன்பு, “***அநியாயத்தில் சந்தோஷப்படாமல்*** (அது நன்மையைக் கொண்டுவரும் என்றாலும்கூட), ***சத்தியத்தில் சந்தோஷப்படும்.***” (1 கொரி. 13:6). ஓ, தேவனுடைய ஒளியூட்டப்பட்ட ஜனங்களில் எத்தனை பேர் சத்தியத்தில் இருப்பதில் உள்ள ஆர்வத்தை இழந்துவிட்டனர், ஒரு பகுதியையோ அல்லது முழுவதுமாகவோ, இழந்து பெயர்ச்சபைக்கோ அல்லது உலகத்திற்குள்ளாகவோ திரும்பிச் சென்று விட்டனர். மற்ற அநேகர் ஏறக்குறைய தப்பறைக்குள்ளாகவும், யூகத்தின் அடிப்படையில் செயல்படும் துணிகரத்துக்குள்ளாகவும் சென்றுவிட்டனர். “**குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை**” (ஆப. 2:3) என்ற எச்சரிப்பைக் கேட்டு, அதற்கு செவி கொடுத்த தேவனுடைய ஜனங்கள், மீண்டும் நம்பிக்கை உறுதியளிக்கப்பட்டு ஏற்ற கால சத்தியத்தில் உறுதியாக நிலைத்து நின்றனர்; தாமதமாகத் தோன்றியவை மற்றும் அதைத் தொடர்ந்து வந்த குழப்பங்கள் மேலும் ஏமாற்றங்கள் மற்றும் அநேகர் ஏறக்குறைய அவநம்பிக்கை, உலகத்தனம், தப்பறை மற்றும் ஊகங்கள் ஆகியவற்றில் விழுந்து போதல்

**சத்தியத்திற்கு முறையாக செயலாற்றுதல்**

*தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான். லூக். 14:27*

**சீஷத்துவத்திற்கான வெகுமதி**

*இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். யோவான் 8:31, 32*



ஆகியவை நேரிட்டாலும் கூட இவற்றையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள் உணர்வுள்ளவர்களாக, சத்தியத்தைப் பெற்றிருப்பதன் மூலம் விசுவாசத்தின் முழு நிச்சயத்தைப் பெற்றிருந்தனர், அதனால் அதன் எந்த தனிப்பட்ட தன்மையும், சாத்தானுடைய சாம்ராஜ்யத்தின் அழிவு மற்றும் அவர்களின் இறுதி விடுதலை உட்பட அனைத்தும் அவர்களை உண்மையாக காத்திருக்கவும், அல்லது தேவன் நியமித்த சமயத்திற்கும் அப்பாற்பட்டு தாமதப்படுவதையும் ஏற்றுக் கொள்ள வைத்தது, ஓ, பூமியனைத்தும் தேவனுடைய தன்னிகரற்ற ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை பற்றிய அறிவினால் நிறைந்திருக்கும், இது சத்தியத்திலும், அதன் ஆவியிலும் நிலைத்திருப்பதில் வெளியரங்கமாகிறது. “**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.**” (ஆபகூ. 2:14; ஏசா. 11:9; 60:1).

யேகோவா தேவன் தம்முடைய சத்தியத்தினாலும், அதன் ஆவியினாலும் மதக் கொள்கைகளாகிய விக்கிரகங்களிலோ அல்லது அவற்றை தயாரிப்பவர்களிடமோ வாசம் செய்வதில்லை. அதற்கு மாறாக, அவர் தம்முடைய ஏற்ற காலத்து சத்தியத்தின் மூலமாகவும், அதன் ஆவியின் மூலமாகவும், தம்முடைய பரிசுத்தமாக்கப்பட்ட மெய்யான சபையில் வாசம் செய்கிறார்; கர்த்தரோ தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். இயேசுவின் கீழ் அவர்கள் மட்டுமே ஏற்ற கால சத்தியத்தின் களஞ்சியமாயிருக்கிறார்கள்; தேவனுடைய உண்மையான வேத வார்த்தைகள் குறித்த புரிந்து கொள்ளுதலை அவர்கள் மாத்திரம் பெற்றிருக்கிறார்கள். அதில் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமாயிருக்கிறது, அவருடைய ஏற்ற காலத்தில் நிச்சயம் நிறைவேற இருக்கிறது. ஆகையால் எல்லாரும் தங்களுடைய மாறுபாடான சபை ஸ்தாபனக் கொள்கை, கோட்பாடுகள், கருத்துக்கள் மற்றும் கட்டுக்கதைகளை அமைதியாக விட்டுவிட்டு, அவருடைய மெய்யான சபையின் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிற அவருடைய பிரசன்னத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற, ஏற்றகால சத்தியத்தால் எச்சரிக்கப் - படுகிறார்கள். (பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது).

யேகோவா தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக “சத்தியத்தில் நிலைத்து இருத்தலிலும்,” “சத்தியத்தை பெற்று இருத்தலிலும் லூக். 14:27-க்கு சரியாக நடந்து கொள்ள வேண்டும்.” தன் சிலுவையை சுமந்துக் கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்.

தொடர்ச்சியான சீஷத்துவத்தின் வெகுமதி என்பது "**சத்தியத்தையும் அறிவீர்கள்**" (யோவா. 8:32) என்பதும், "**எப்போது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாய்**" இருக்க மாட்டீர்கள் என்பதுமாகும். (2 தீமோ. 3:7). அநேகர் செய்யக்கூடிய தவறு இதுதான்: அவர்கள் கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருக்கத் தவறி, கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணிக்கவும் அல்லது புரட்டவுமான எதிர்கோட்பாடுகளை அமைக்கவும் பல்வேறு மனித தத்துவங்களை ஆராய்வதும் தான். இந்த மனிதக்கோட்பாடுகளில் உண்மையைத் தேடுகிறவர்களுக்கு, அவர்கள் அதை எப்போதாவது கண்டுபிடிப்பார்கள் என்பதற்கான எந்த வாக்குறுதியும் இல்லை, அவர்கள் ஒருபோதும் அதைச் செய்யப்போவதில்லை.

நாம் மெய்யார்வமும் நேர்மையுமான சீஷர்களாய் கர்த்தருடைய வார்த்தையில் தொடர்ந்தோமானால், உண்மையாகவே, நாம் "சத்தியத்தை அறிந்து கொள்வோம்" "நிகழ்கால சத்தியத்தில் [ஏற்றகால சத்தியத்தினால்] நிலைபெற்றிருப்போம்." "சத்தியத்தில் வேரூன்றி உறுதியாக நிலைநாட்டப்பட்டுமிருப்போம்; நாம்விசுவாசமுள்ளவர்களாயிருப்போம், நம்மில் இருக்கிற நம்பிக்கைக்கான காரணத்தையும் கொடுக்க முடியும்;" "**பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராடுவதற்கும், நல்ல போராட்டம் பண்ணும்படிக்கும்**"; "**நல்ல அறிக்கை பண்ணும்படிக்கும்**" உறுதியுடன் "**இயேசுகிறிஸ்துவுக்கு நல்லப்போர்ச்சேவகனாய் தீங்கனுபவிக்கும்படிக்கும்**" என நம்முடைய போராட்டம் முடியும் வரைக்கும் கூட இவைகளைச் செய்ய முடியும்" (2 பேது. 1:12; கொலோ. 1:23; 2:7; 1 பேது. 5:9; 3:15; 1 தீமோ. 1:18; 6:12; 2 தீமோ. 2:3).

சத்தியத்தை பெற்றிருக்கிறவர்களாகிய நாம், இவ்வளவு காலமாக இந்த உலகை ஆட்சி செய்த மகாபெரிதான சமுதாயம் மற்றும் சபை ஸ்தாபன மதஅமைப்புகளும் பயங்கரமாக அசைக்கப்படுவதாக, முழு உலகத்தின் மீதும் இப்போது காண்கிற பயத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுகிறோம். "**சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், பூமியிலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்: சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்.**" (லூக். 21:25). தேவனுடைய திட்டத்தைப் புரிந்துக் கொள்ளாத சிந்திக்கிற ஜனங்கள் அராஜகம் மற்றும் பயங்கரத்தின் சாத்தியமான விளைவைக் கண்டுபயப்படுகிறார்கள்; உலகின் மாபெரும் ஆபத்துக் காலத்தின் (தானி. 12:1; மத். 24:21) வேகமும் துரிதமுமான உச்சக்கட்டத்தை நாம் நெருங்குகையில் அவர்களின் அபாய அறிவிப்பொலி அதிகரித்து வருகிறது, அந்த உச்சக்கட்டத்தை நோக்கி நாம் வேகமாக விரைந்து கொண்டிருக்கிறோம். சங். 141:3-ல் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய கட்டளையை நாம் ஏற்றுக் கொள்கிறோம், "**கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்: என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்.**" (NKJ).

அவருடைய கீழ்ப்படிதலுள்ள ஜனங்கள் ஏற்கனவேயுள்ள காலத்திற்கேற்ற நன்கு பக்குவப்படுத்தப்பட்ட சத்தியத்தில் பங்கேற்பார்கள் என்றும், அதன் பெருக்கம் மிகவும் அதிகமாக இருக்கும் என்றும், அவர்களுடைய வரையறுக்கப்பட்ட திறன் காரணமாக, மேலும் புதிய சத்தியங்கள் வெளிவருவதற்கு முன்பாக, அவர்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளவும், உட்கிரகித்து தன்மயமாக்கவும் முடியாது என்றும் தேவன் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். "**நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்: எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.**" (1 யோவா. 1:3).

தேவனுடைய குமாரர்கள் அனைவரும் தெய்வீக வார்த்தையை கற்றுக் கொள்வதற்கும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும் விசுவாசிகளாக ஒன்று கூடும் போது நேர்மையின் முக்கியத்துவத்தை "உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள சத்தியத்தை" நினைவில் கொள்வோமாக; "**ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யலாகாது, ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.**" (பிலி. 2:3). ஒருவருக்கொருவர் நல்லவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், உண்மையானவர்களாகவும் இருக்க நாடுகிறவர்களாயிருக்கக்கடவோமாக; ஒவ்வொருவரும் தன்னுடைய இருதயத்தைக் கவனிக்கவும், தன்னுடைய குறைகளை அறியவும் நாடக்கடவோமாக, இவ்வாறாக, தனிப்பட்ட மனத் தாழ்மையும் சகோதரர்களின் அன்பும் தெய்வீக விஷயங்களைப் பற்றிய அறிவில் நமது வளர்ச்சியுடன் வேகத்தை தக்கவைத்துக் கொள்வதாக; தாழ்மை, பொறுமை, சாந்தகுணம், சகோதர சிநேகம், அன்பு ஆகிய ஆவியில்லாத அனைவரும் இந்த தற்காலத்தில் நிச்சயமாகவே வேறு பிரிக்கப்பட்டுவிடுவார்கள் என்பதில் நாம் உறுதியுடன் இருக்கலாம். (1 யோவா. 2:19). சிலர் ஆபரணங்களாக இரத்தினங்களாக உருவாக்கப்பட்டவர்களின் மத்தியில் இருக்க மாட்டார்கள்; அவர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து துடைத்தெறியப்படுவார்கள். (வெளி. 3:5). கர்த்தரால் உருவாக்கப்படும் இரத்தினங்கள் தூய்மையானதும், களங்கமற்றதுமாயிருக்கும், அவர்கள் பிதாவுக்கு முன்பாக அன்பிலே குற்றமற்றவர்களாயிருக்கக்கடவர்கள்; பரிபூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளுவது மட்டுமல்லாமல், சுயநலத்தையும், பகைமையையும், தீயசந்தேகங்களையும், தீய பேச்சுக்களையும், அதோடே கூட சுயஅன்பு மற்றும் பெருமையையும் கூட புறம்பே தள்ளுகிறது. தேவன் கிருபையாக இவைகளை அவருக்கு மிகவும் அருமையானவர்களுக்காகவும், ஒரு விசேஷித்த அர்த்தத்தில் தமக்கு சொந்தமானவர்களுக்காகவும் வைத்திருக்கிறார். "**என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**" - மல். 3:17.

நம்முடைய அறிவு மற்றும் கிருபையின் வளர்ச்சிக்காகவும், அவருடைய ஊழியத்தில் நம்முடைய பயன்பாட்டிற்காகவும் நம் அனைவருக்கும் மேலும் மேலும் திறந்து வெளிப்படுத்தப்படும் சத்தியத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பா ராக!

# இளம் வயதில் மரித்துப்போகிற, யேகோவா தேவனுடைய ஊழியக்காரர் பற்றிய சிந்தனைகள்

Thoughts on a Servant of Jehovah, Who dies young

**ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல: ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி, அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். எபே. 2:9,10.**

"மனிதன் சாவுக்கேதுவானவன், இதுதான் அவனுடைய பிரச்சனை. அவன் மரிப்பான்" ஜாலி போதகர் இந்த புரிதலை நம்முடைய கவனத்துக்கு கொண்டு வருகிறார். ஆம், நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் அற்புதமான மருந்துகள் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தப்பட்டாலும் கூட, எந்த மனிதனும் தன்னுடைய மரணத்தை காலவரையின்றி தள்ளிப் போட முடியாது. எந்த மனிதனும் கல்லறையிலிருந்து தன்னை மீண்டும் கொண்டுவர முடியாது. ஜீவனுக்கான அதிகாரம் சிருஷ்டிகரிடமே உள்ளது; சிருஷ்டிகளிடம் அல்ல. "**தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்!**" (ஆதி. 2:7). ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான் என்று யோபு 14:1 தெரிவிக்கிறது. பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய பிள்ளை தன்னுடைய நாட்களை எண்ண முடியாது. ஒருவன், தனிநபராக பிரதிஷ்டையில் தன்னுடைய ஜீவனை ஒப்படைக்கும் போது, தேவனுடைய பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் உள்ளாக நாம் நமக்கு கொஞ்சமாக இருக்கும் அனைத்தையும் இவ்வாறு தேவனுடைய கரங்களில் ஒப்புக் கொடுத்து விடுகிறோம்.

சுவிசேஷ யுக அறுவடையின் விரிவாக்கப்பட்ட வேலையின்பொழுது, தெரிந்தெடுப்பு அல்லது தெரிந்தெடுப்புக்குட்பட்ட இரட்சிப்பின் விதிமுறைகளின் கீழ் பிரதிஷ்டை செய்கிறவர்கள், தங்களுடைய பிரதிஷ்டையை மரணத்திற்கென்று செய்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமக்குரிய கொஞ்சம் எல்லாவற்றையும், தேவன் விரும்புகிற வரை அவர் பயன்படுத்துவதற்கென்று அவரிடம் கொடுக்கிறோம். ஆபிரகாமின், ஆயிரம் வருடத்திற்கு முந்தைய சந்ததி/வித்து என்ற வகையில், பிரதிஷ்டையின் தெரிந்தெடுப்புக்குட்பட்ட விதிகளின் கீழ் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களின் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள்; அனுபவமாகிய நீரோடையிலிருந்து பருகுவதற்கான நம்முடைய காலமாக இது இருக்கிறது. நமது அன்பான எஜமானர், நீரோடையில் பருகிய காலம் கடந்து சென்று விட்டது. ஆயினும், அவற்றிலிருந்து கிடைத்த பாடங்களும், உற்சாகப்படுத்துதலும் இன்னும் நமக்கு முன்பாக வேதவாக்கியங்களின் பதிவுகளில் இருக்கிறது. ராஜ்யத்துக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்கு தேவையான பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு நாம் அனுபவம் என்னும் நீரோடையில் குடிக்கிறோம். நாம் நீரோடை அனுபவங்களை ருசித்திருக்கிறோம், நாம் கீழப்படிதல் பற்றி ஏதோ கொஞ்சம் கற்றுக் கொண்டிருக்கிறோம், நாம் ஏதோ கொஞ்சம் சோதனைகளைத் தாங்கியிருக்கிறோம் என்பதெல்லாம் மட்டும் போதாது. சில சந்தர்ப்பங்களில் நாம் பட்ட பாடுகளின் மூலமாகவும் நாம் கீழ்ப்படிதலைக் கற்றிருக்கிறோம். பிதாவே, எங்களுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே செய்யப்படுவதாக என்று நாம் மகிழ்ச்சியுடன் சொல்ல முடிகிறவரை, நாம் தொடர்ந்து பருக வேண்டும். நாம் இந்த வழியில் நீரோடையில் பருகாவிட்டால், நாம் பின்வரும் மகிமையில் பங்கடைய முடியாது.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர், இந்த விஷயத்தை அதன் உண்மையான வெளிச்சத்தில் பகுத்தறியாமல், பரீட்சைகள் மற்றும் சோதனைகளிலிருந்து தாங்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்று ஜெபிக்கும்படி தள்ளப்படுகிற அதே வேளையில் பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களுக்கு வரும் சோதனைகளும், கஷ்டங்களும், அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கும், அவர் நம்மை அழைத்திருக்கிற ராஜ்யத்தில் ஒரு மகிமையான பங்கை அடைவதற்காக அவருடைய பயிற்சி மற்றும் ஆயத்தத்தின் கீழ் இருக்கிறோம் என்பதற்கு ஆவிக்குரிய சாட்சிகளாக இருக்கிறோம் என்பதையும் புரிந்துக் கொள்ள வேண்டும். பாடனுபவிப்பதும், நல்ல போர்ச் சேவகர்களாக தீங்கனுபவிக்க கற்றுக் கொள்வதும், நம்முடைய சோதனைகளையும் கஷ்டங்களையும் சரியான நோக்கு நிலையில் மேன்மையாக எண்ணுவதும், அவைகள் நமக்கு வரும்போது, அதை சந்தோஷமாக எண்ணுவதும், பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய பிள்ளைக்குரிய சிலாக்கியமாயிருக்கிறது.

அதே போல, லாசருவின் சுகவீனமும், அதைத் தொடர்ந்து அவனுடைய மரணத்தையும் பற்றி இது லாசருவின் பாவத்தின் காரணமாக அல்ல, தேவனுடைய நாமம் மகிமைப்படும் பொருட்டு இது அனுமதிக்கப்பட்டது என்று நம் கர்த்தர் அறிவிக்கிறார். ஆகவே, இந்தப் பாடத்தில் (யோவா. 9:3) பிறவியிலேயே பார்வையற்றவனாக இருந்த மனிதன் பாவத்தின் காரணமாக அல்ல, ஆனால் அதற்கு மாறாக "**தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தான்**" என்று கர்த்தர் அறிவிக்கிறார். ஆம், அற்புதம், கிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக வல்லமையின் தவறில்லாத தெளிவான சான்றைக் கொடுத்தது. மேலும் மேசியா உத்தியோகத்துக்கு உரிமை கோரிய அவரது கூற்றின் உண்மைக்கு சாட்சியாகவும் இருந்தது.

இதைச் சொல்லும் அதே வேளையில், பாவம் அடிக்கடி சுகவீனத்தைக் கொண்டு வருகிறது என்பதையும் நாங்கள் மறுக்கிறதில்லை. மாறாக நாங்கள் இதை ஏற்றுக் கொள்வதுடன், நம் கர்த்தர், அவர் சுகப்படுத்தியவர்களில் ஒருவனிடம், இதோ, நீ சொஸ்தமானாய் அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே

(யோவா. 5:14) என்று அவர் கூறின வார்த்தைகளுடன் இந்த கருத்தை உறுதி செய்கிறோம். எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே, நாம் அனுபவிக்கிற கஷ்டங்களைத் தருகிற சாத்தானுடைய வல்லமையை நாங்கள் புகழவில்லை. அவன் வரம்புக்குட்பட்டவன் மற்றும் கட்டுப்படுத்தப்பட்டவன் என்பதில், நாங்கள் மெய்யாகவே மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், நாம் பிறப்பின் பலவீனங்களில் கீழ், போதுமான அளவுக்கு தீமையான மனநிலைகளையும், பரம்பரை மூலமாக பெற்றுக் கொண்ட பலவீனங்களையும் பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு இடையே மட்டுமல்லாமல், அயலானுக்கும் அயலானுக்கும் இடையேயும் இருப்பதை நாம் காண்கிறோம். சாத்தானுடைய ஏமாற்றும் வல்லமை–யானது நாம் தீமையான காரியங்கள் மீது அனுதாபம் கொண்டு, அவைகளுடன் தொடர்பு கொள்ளாமலிருக்கும் வரை நம்முடைய சித்தங்களுக்கு மாறாக, நம்முடைய மனங்களை மாசுபடுத்த அனுமதிக்கப்படுகிறதில்லை என்பதைக் குறித்து உண்மையாகவே நாங்கள் மகிழ்ச்சி–யடைகிறோம். மனிதனிடத்தில் கிரியை செய்கிற சுகவீனம் மற்றும் மரணம் ஆகியவை முற்றிலுமாக அந்தகாரப் பிரபுவின் அதிகாரத்தின் கீழ் இருக்கவில்லை என்பதைக் குறித்தும் மகிழ்ச்சியடைகிறோம். சாத்தானுடைய வல்லமை மரணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கிற போதிலும், அவன் இந்த வல்லமையை வரையறையில்லாமல் பெற்றிருக்கவில்லை–யென்றும், ஆனால் தேவனுடைய கட்டுப்பாடு மற்றும் வரையறைக்குட்பட்டு மட்டுமே செயல்படுத்த முடியும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய பிள்ளையின் ஜீவனும் மரணமும் சாத்தானின் கட்டுப்பாட்டில் அல்ல, தேவனுடைய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின் கீழ் இருக்கிறது.

நம்முடைய சிநேகிதனாகிய யோபுவைப்பற்றி சுருக்க–மாக பார்ப்போம். யோபுவின் விஷயத்தில், சுகவீனம் மற்றும் பல்வேறு வகையிலான பேராபத்துகள், பாவத்திற்கான தண்டனைகளாக அல்ல, மாறாக தேவனிடத்தில் கொண்–டுள்ள விசுவாசத்தின் பரீட்சைகளாக இருந்தன என்பதற்கு மற்றொரு உதாரணமாகும். ஏனெனில், தேவனிடத்தில் யோபுவிற்கு இருந்த அன்பு, அவர் மீது யோபு வைத்திருந்த நம்பிக்கை, யோபு உண்மைத்துவத்தோடு தேவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை ஆகியவை, "**அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்**" (யோபு 13:15) என்ற யோபின் சொந்த சாட்சியும் நமக்கு இருக்கிறது. மேலும், தேவனுடைய தாசனாகிய யோபுவிற்கு அனுகூலமாக அதே கருத்தை வலியுறுத்தியும் யோபுவின் சுகவீனம் மற்றும் பேராபத்துகள் பாவத்திற்கான தண்டனை கள் என்று அவனுடைய சிநேகிதர்கள் தவறாக குறித்துக் காட்டியதைக் கண்டித்துப் பேசியதற்கும் தேவனுடைய சாட்சி நமக்கு இருக்கிறது.

பிரதிஷ்டை செய்துள்ள பிள்ளைகளாக, நாம் இனிமேலும் தொடர்ந்து குருடர்களாக இருப்பதில்லை. ஆனாலும், தெய்வீக நீதியின் காரியங்கள் காக்கப்பட்டு வரும் விதத்தை நாம் முழுவதுமாக அறிந்து கொள்ளவும் முடியாது. கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங் களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன், நான் கர்த்தருக்கு செய்த பொருந்தனைகளை (என் பிரதிஷ்டையின் உடன்படிக்–கையையும், அதற்கு கீழ்ப்பட்ட என் பொருத்தனைகளையும் நிறைவேற்றுவேன்) அவருடைய ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும் (நலனுக்காகவும்) செலுத்துவேன். (சங். 116:12-14). இயேசுவின் விஷயத்தில் உள்ளது போல மரணம் வரை அநுதினம் சாவதில் உண்மையுள்ளவர்களாயிருப்–பதும், (1 கொரி. 15:31) கர்த்தருடைய பரிசுத்தவான்களின் (அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களின்) மரணம் அவர் பார்வைக்கு அருமையானது என்பதுமே இதன் அர்த்தமாயிருக்கிறது.

கிறிஸ்தவ போர்வீரர்களாக, ஒவ்வொரு விஷயத்திலும் "விசுவாசப் போராட்டத்தை" நாம் போராட வேண்டும். இந்தப் போராட்டம், கண்களால் காண முடியாத அதிபதியின் கீழும், கண்களால் காண முடியாத எதிராளிக்கு எதிரானதுமாயிருக் கிறது. விசுவாசக் கண்களால் மட்டுமே, நாம் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியை அறிந்து கொள்ள முடியும், தேவனுடைய வார்த்தையின் மூலமாக மட்டுமே, நாம் அவருடைய போதனைகளைப் பெற்று நம்மை எதிர்க்கும் தந்திரமான எதிராளியைக் கண்டுணர்ந்து கொள்ளவும் முடியும். இது ஊக்கமான ஜெபத்தினாலும், இடைவிடாமல் விழிப்பாக இருப்பதினாலும் மட்டுமே, வெற்றிகரமாக நடத்தப்படும் போராட்டமாகும். அப்படியிருந்தால் மட்டுமே, "**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம்**" என்று நாம் மகிழ்ச்சியுடன் கூற முடியும். (1 கொரி. 15:57).

எவ்வளவு நீண்ட காலத்துக்கு, நாம் ஜீவ சுவாசத்தைப் பெற்றிருந்தாலும் சரி, உண்மையான போர் வீரனாயிருப்ப–தற்கு, நாம் நெருங்கிய விசுவாசத்தை உடையவர்களா–யிருக்க வேண்டும். அது தேவனிடத்தில் அறிவின் அடிப்படை–யிலான நம்பிக்கையாக மட்டுமிராமல், பட்டியலிடப்பட வேண்டிய (மனதின்) அறிவு மற்றும் அன்பு இரண்டின் அடிப்படையிலும் இருக்க வேண்டும். சிலர் மனதில் (தலை) மட்டும் நம்பிக்கை வைத்திருப்பார்கள் மற்றவர்கள் இருதயத்–தில் மட்டும் நற்பண்புகளைக் கொண்டிருப்பார்கள். இவை–களில் ஏதேனும் ஒன்றை மட்டுமே தனித்து கொண்டிருப்பது போதுமானதாக இருக்காது. இவைகளில் தனித்த ஒன்று மாத்திரம் கடுமையான சோதனையை தாங்காது. ஒருவன் முடிவுபரியந்தம் நிலைநின்று (வயது எதுவாக இருந்தாலும்) வாக்களிக்கப்பட்ட வெகுமதியை வெற்றியாக பெறவேண்டு–மானால், அவைகள் ஒன்றோடென்று சேர்ந்து இருக்க வேண்டும். நம் கர்த்தரும், அப்போஸ்தலர்களும் குறிப்–பிடுகிற நம்முடைய விசுவாச சோதனை என்பது தெய்வீக சத்தியங்களை நம்முடைய மனதில் அறிந்துணர்ந்து ஏற்றுக் கொள்கிறது மட்டுமல்லாமல், தேவன் மீதும், கிறிஸ்துவின் மீதும் உள்ள இருதயத்தின் நம்பிக்கையுமாகும். இரண்டு விஷயங்களிலும், தேவனுடைய ஒவ்வொரு உண்மையான பிள்ளையும், தன்னுடைய விசுவாசம் மிகக் கடுமையாக பரீட்சிக்கப்படுவதைக் காண்பான். விசுவாச உண்மைத்துவ–முள்ள போர் வீரனாக இந்த மோதலுக்கு/போராட்டத்துக்கு ஆயுதம் தரித்துக் கொள்ளத் தவறிவிடக் கூடாது.

நமது விசுவாசத்தின் அறிவு சார்ந்த அடிப்படையின் மீது, ஒரு தாக்குதல் நடத்தப்படுமானால், நம்முடைய விசுவாசத்தின் ஒவ்வொரு வகைக்கும், "**இவ்வாறாகக் கர்த்தர் கூறுகிறார்**" என்பதை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் கண்டிப்பாக கண்டறிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை மட்டுமே ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிப்பதாக இருப்பதாக! மனித தத்துவங்கள் எவ்வளவு புத்திகூர்மையுள்ளவையாக இருந்தாலும், அது நம்மைத் தப்பறைக்கே வழிநடத்தும். ஏனெனில் விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாக இல்லாவிடில், எதிராளியின் காற்றுகளும், பெருவெள்ளங்களும், அடிக்கும் போது மேல் கட்டுமானம் நிற்க முடியாமல் போய்விடும் (மத். 7:24-27). சந்தேகமும், பயமும் அதைப்பற்றி நடுக்கத்தை உண்டாக்கும். அது இவ்வாறாக பலவீனப்படும் போது தந்திரமான எதிராளி நிச்சயமாகவே, அதற்கு எதிராக ஒரு மிகக் கடுமையான சோதனையை அனுப்புவான், மேலும் ஆத்துமாவின் ஆபத்து பெரியதாக இருக்கும்.

மரணம் வருவது நிச்சயமாயிருப்பது போலவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலில் ஜீவனும் நிச்சயமாகவே வருகிறது. யேகோவா தேவனுடைய பிள்ளைகளாக, நாம் நமக்கு கொஞ்சமாக இருக்கும் அனைத்தையும் அவருடைய பராமரிப்புக்கும், பாதுகாப்புக்கும், ஒப்புக்கொடுக்கிறோம். அதில் நமது மரண நேரமும் அடங்கும். ஒரு வாழ்க்கையானது ஞாபகார்த்தமாக மாறும் போது, அந்த ஞாபகார்த்த நினைவு ஒரு பொக்கிஷமாக மாறுகிறது. ***

# பாவம் நிறைந்த உலகம்

## The Sin filled world

"**பாவஞ் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்: நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.**" 1 யோவான் 3:4

நேர்மையின்மையின் மூலமாக இலாபம் பெறுவதற்காக கிடைக்கிற எந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு, அநேகர் நேர்மையாய் நடப்பதே, இந்த உலகில் கடினம் என்று எண்ணக் கூடிய அளவுக்கு மனுக்குலத்தாரின் புத்தியை கூர்மையாக்கியது எது?

உலகத்தாரின் பசி, ஏழ்மை, நோய்கள் ஆகிய வற்றைப் போக்கிடவும், உலகத்திலுள்ள பாலைவனங்களை ரோஜாவைப் போல் மலர்ந்திடச் செய்யவும், செலவழிக்கப் படுகிற ஏராளமான பணங்கள் ஏன் பலன் தருவதில்லை? பாவமே காரணம் என்று நாங்கள் பதில் அளிக்கிறோம்! மனித இருதயங்களில் ஆதியிலிருந்த அன்பின் தேவ சாயலை பாவம் பாழாக்கிவிட்டதுடன், அதற்கு பதிலாக அதற்கு எதிரான சுயநலமாகிய குணாதிசயத்தை ஆழமாகப் பதிய வைத்துவிட்டது "**இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்**" (சங். 51:5) என்று நாம் வாசிக்கிறோம். மொத்த மனுஷ குடும்பத்திற்கும் தனிப்பட்ட வகையில் இது உண்மையாகவே இருக்கிறது.

பெருந்தொகையான பணம் விநியோகிக்கப்பட்டாலும் கூட, உதாரணமாக: அயல்நாட்டு உதவி மற்றும் அநேக தனிநபர்களும் கூட தாராள குணத்துடன், தொண்டு நிறுவனங்களுக்கு கொடுக்கிறார்கள்; நாம் அடிக்கடி மேற்பரப்பை மாத்திரம் பளபளப்பாக்குகிறோம் என்பது உண்மையாக இருக்கிறது. வளர்ந்த பணக்கார நாடுகள் தாங்கள் வெளிநாடுகளின் வளர்ச்சிக்காக உதவி செய்வதற்காக அநேகந்தரம் பெருமைப்பட்டுக் கொள்கின்றன. அதே சமயத்தில் போர்த்தளவாடங்கள் உற்பத்தி செய்யும் அவர்களுடைய நிறுவனங்கள், அழிவுக்குரிய ஆயுதங்களை விற்பனை செய்வதன் மூலமாக அளவுக்கு மிஞ்சிய அளவிலான செல்வங்கள்/ஆயிரக்கணக்கான மில்லியன் டாலர்களை சேகரிக்கின்றன. தனிநபர் மட்டத்தில் செல்வத்தின் பெரும் பகுதி சுயத்தை திருப்தி செய்யவும், நுகர்வோர் பொருட்கள், கேளிக்கைகள், அதைப் போலவே போதைப் பொருட்கள் மற்றும் ஆபாசமான காரியங்கள் போன்ற சட்டவிரோத முயற்சிகளுக்கு தொடர்ந்து செலவழிக்கப் படுகின்றன.

**பாவங்கள் மற்றும் நற்குணங்கள்**

| | | |
|---|---|---|
| இச்சை | அல்லது | கற்பு |
| பெருந்தீனி | அல்லது | மிதமாயிருத்தல் |
| பேராசை | அல்லது | அன்பாதரவு |
| சோம்பல் | அல்லது | சுறுசுறுப்பு |
| கோபம் | அல்லது | பொறுமை |
| பொறாமை | அல்லது | இரக்கம் |

இந்த நூற்றாண்டின் பெரும்பாலான பகுதியில் உலகம், "**சமாதானம் சமாதானம்**" என்று கூக்குரலிட்டு வருகிறது; ஆனால், சமாதானமே இல்லை என்பது தான் தன்னில்தானே வெளிப்படையாயிருக்கிறது. (எரே. 6:14). மாறாக, அநேக நாடுகளில் யுத்தத்துக்கான ஆயத்தம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஏன்? ஏனெனில் நாகரீகமாகிய மாய தோற்றத்தைப் பொருட்படுத்தாமல், உலகம் தன்னுடைய சொந்த சுயநலத்தையும், பேராசையையும் நன்கு அறிந்திருப்பதால், அதிகாரத்துக்காகத் தவிக்கிறது; மேலும் மற்றவர்களிடமும் இதே சுயநலமும், பேராசையும் இதைப் போலவே ஆள்கிறதை இது காரணம் காட்டுகிறது. ஆகையால் தங்களுக்குள் நட்பு கொள்வதை எதிர்த்து, உலகத்திலுள்ள அநேக அரசாங்கங்கள் ஒன்றையொன்று நம்புவதை விட்டுவிட்டு அவநம்பிக்கையுடன் இருந்து வருகின்றன.

பாவம் நிறைந்த வழிகளே அநேக சூழ்நிலைகளில் முன்வைக்கப்படுகின்றன. வேதாகமம் மீண்டும் மீண்டும் பூமி, வானம், மலை, கடல் ஆகிய வார்த்தைகளை அடையாளமான வகையில் பயன்படுத்துகிறது என்பதை நினைவுகூருவோம். பூமியானது ஒழுங்குபடுத்தப்பட்ட ஜனசமுதாயத்தை குறித்துக்காட்டுகிறது; மலைகள், இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தின் முதுகெலும்பான ராஜ்யங்களை அடையாளப்படுத்துகின்றன. கடல்கள், சமூகம் சார்ந்த பூமியை விழுங்கிட தொடர்ந்தேர்ச்சியாக

நாடுகிற மனுக்குலத்தின் அமைதலற்ற ஜனக்கூட்டத்தை குறித்துக் காட்டுகின்றன. அதே அடையாளமான வார்த்தை-களில் வானங்கள், உலகத்தின் சபை சார்ந்த அதிகாரங்-களை அடையாளப்படுத்துகின்றன. வானங்களில் தோன்றுகிற அடையாளம் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்புகளின் தொடக்கமானது, நம்முடைய நாளின் மத அமைப்புகள் மீது விழும் என்பதை தெரியப்படுத்துகிறது. நியாயத்தீர்ப்புகளின் கொழுந்து விட்டெரிகிற அக்கினி முதலாவது மத அமைப்பு-களின் விவகாரங்களிலும் அதன் வட்டங்களிலும் வெளிப்-படுத்தப்படும். மனுக்குலத்தார் படிப்படியாக, ஒரு புதிய அரசாங்கத்தின் அதிகாரம் செயல்பாட்டில் இருக்கிறதையும், அதன் கொள்கை நியாயத்தை நூலும், நீதியை தூக்கு-நூலுமாக வைக்கும் பிரமாணமாயிருக்கும் (ஏசா. 28:17) என்ற எண்ணத்துக்கும் விழித்துக் கொள்ளும். மனுஷனு-டைய விழுந்து போன நிலைமையின் காரணமாக, அநீதி எங்கும் வியாபித்திருப்பதால், மொத்த உலகத்தாரின் மனசாட்சி விழித்துக் கொள்ளச் செய்யப்பட்டு, உயிர்ப்பிக்கப்-படும்; அத்துடன் பயமும், திகிலும் எல்லா வகுப்பினர் மேலும் எவ்விடங்களிலும் வந்தடையும்.

மேலும், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் மேசியா-வைக் குறித்தும், அவருடைய இரண்டாம் வருகையின் நோக்கம் மற்றும் ராஜ்யத்தைக் குறித்தும் மிகவும் ஒழுங்-கற்றதும், தவறான கண்ணோட்டங்களையும் கொண்டவர்-களாயிருக்கிறார்கள் என்பது நினைவு கூரப்படும். "**பிசாசு-களின் உபதேசங்கள்**" இருண்ட யுகங்களின் போது சபை அமைப்புக்குள்ளாக கொண்டு வரப்பட்டு, தேவனுடைய வார்த்தையை வெறுமையாக்கியதால் எல்லா கிருபையும் உள்ள தேவனாகவும், சகல இரக்கங்களின் பிதாவாகவும், அவரிடமிருந்தே நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் வருகிறது என்பதையும் (யாக். 1:7) உணர்ந்து கொள்வதற்கு பதிலாக, பெரும்பான்மையான மனுக்குலத்-தார் சர்வவல்லவரைக் கண்டு பயந்து, அவரை தங்களுடைய சர்வவல்ல எதிரியாக எண்ணி, அஞ்சி நடுங்குகின்றனர். உலகத்தாரின் கண்கள் தேவனுடைய நற்குணத்தை அறிய முடியாதபடிக்கு குருடாக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்துவின் நீதியான நியாயத்தீர்ப்புகள் பூமி முழுவதையும் சூழ்ந்-திருப்பதை மனுக்குலத்தார் உணரும்போது, அவர்கள் இருதயங்களிலிருக்கிற பயங்கரமான அச்சமானது, பயத்தின் புலம்புதலுக்கு வழி வகுக்கும்.

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாக நாம் 2 பேது. 3:12-ல் "**அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்துபோகும்** என்றும் வசனம் 10-ல் **....பூமியும்,** (அக்கினி பற்றிப் பிடித்து) **அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும்**" என்றும் கூறப்பட்டுள்ள வசனங்களின் மெய்யான அர்த்தத்தைப் புரிந்துக் கொள்வோமாக. இந்த விளக்கங்கள் சொல்லர்த்தமான பூமி சொல்லர்த்தமாக பற்றி எரிதல் என்பதாக அர்த்தங்கொள்வதாக நம்முடைய முன்னோர்கள் யூகித்தது போன்ற தவறை நாம் செய்யாதிருப்போமாக, அதற்கு மாறாக அடையாளமான பூமியும், அடையாளமான வானங்களும் அடையாளமான அக்கினி பற்றி எரிந்து, மிகப்பெரிய கொந்தளிப்புடன் கடந்து போக இருக்கின்றன; அதே சமயம் சொல்லர்த்தமான பூமி, ஏற்கனவே எப்படி இருக்கிறதோ அப்படியே நிலைத்திருக்கும் என்பதுடன் சகலத்தையும் மீட்டுக் கொடுக்கிற கிறிஸ்துவாகிய புதிய ராஜாவின் கீழாக இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலின் மறுரூபமாக்கும் செல்வாக்கின் கீழ்: மாற்றமடையத் தொடங்கும். அக்கினி பூமியை அடைவதற்கு முன்பாக வானங்களுக்கு முதலில் வருகிறது என்று இயேசு இவ்விஷயத்தைப் பற்றி சொன்ன அதே வரிசையில் பரி.பேதுருவும் குறிப்பிடுகிறதைக் கவனிப்போமாக. நியாயத்தீர்ப்பாகிய கொழுந்துவிட்டெரியும் அக்கினியின் அடையாளமும், வெளிப்பாடும் வானங்களில் தோன்றும்; அதைத் தொடர்ந்து மனுஷகுமாரனின், அடையாளம் நியாயத்தீர்ப்பில் - பாவம், சுயநலம் மற்றும் அநியாயமாகிய ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களை முற்றிலும் சுத்திகரிக்கும் நோக்கோடு பூமிக்குரிய காரியாதிகளுக்கு நெருங்கி நெருங்கி வருவதாகக் காணப்படும். அப்போது பூதங்கள் வெந்து உருகிப் போகும் என்று நமக்கு சொல்லப்படுகிறது.

வேத வாக்கியங்கள் நம்முடைய தற்போதைய நிலைமையை வரைபடத்தின் மூலமாக விளக்குகின்றன. யோவேல் 3:9-12-ல், இப்போது நடந்து கொண்டிருப்பதைக் குறித்து நமக்கு ஒரு வார்த்தை - சித்திரம் கொடுக்கப்பட்டிருக் கிறது; எங்கள் கருத்துக்கள் அடைப்புக் குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன. வசனம் 9 "**இதை புறஜாதிகளுக் குள்ளே** [தேசங்களுக்குள்ளே] **கூறுங்கள், யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்** [பரிசுத்தப்படுத்துதல் அல்லது பிரித்து சுத்திகரித்தல்] **பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள், யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள்**" (அடைப்பி லுள்ள குறிப்புகள் ரோதர்காம்) வசனம் 10 உங்கள் மண்-வெட்டிகளைப் பட்டயங்களாகவும், "**உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்: பலவீனனும்** [தேசங்கள்] **தன்னை பலவான் என்று சொல்வானாக.**" வசனம் 11, "***சகல ஜாதிகளே*** [பொதுவான தேசங்கள்] **நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள், கர்த்தாவே, நீரும் அங்கே உம்முடைய பராக்கிரமசாலிகளை இறங்கப் பண்ணுவீராக.**" வசனம் 12 "**ஜாதிகள் எழும்பி யோசபாத்தின்** [யேகோவா நியாயந்தீர்த்தார்] **பள்ளத்தாக்குக்கு வருவார்களாக சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன்.**"

"**யோசபாத்தின் பள்ளத்தாக்கு**" என்பது வந்து கொண்-டிருக்கிற மகா பெரிய போராட்டத்தின் உருவகமாயிருக்கிறது, அந்த போராட்டத்துடன் அந்தகார பிரபுவின் ஆட்சி முடிவடைவதுடன், அது மேசியாவின் ராஜ்யத்துக்கு வழியை ஆயத்தப்படுத்தும். தங்களை பரலோகத்திற்கு மிகவும் விருப்பமானவர்கள் என்பதாக கருதிக் கொண்டிருந்த தேசங்களாகிய கிறிஸ்தவ மண்டலத்தின் மீது வெடித்து எழுந்த மகா உபத்திரவ காலம், முதல் உலக மகா யுத்தம் வடிவமாகவும், அது இரண்டாவது யுத்தம் வழியாக விரைந்து முன்னேறிச் சென்றது, சட்டம், ஒழுங்கு மற்றும் நெறிமுறை-களை பொதுவாக உடைந்துபோவதற்குள் சென்ற அது இப்பொழுது கிறிஸ்தவ மார்க்கம் என்பதாக பாவனை செய்து கொண்டிருந்த பொய்யான நாகரீகத்தின் போலியான உரிமைகளை அழிக்கும் அதன் வேலையை செய்து கொண்டிருக்கிறது. இந்த காலம் குறைக்கப்பட வேண்டும் என்ற அவருடைய வார்த்தையில் உள்ள நிச்சயத்துக்காக தேவனுக்கு நன்றி கூறுவோமாக.

# தைரியத்தின் மாபெரும் அவசியம்

கிறிஸ்தவ ஜீவியத்தில் தைரியத்திற்கான மிகப்பெரிய அவசியம் இருக்கிறது. தேவனுடைய நோக்கம் இந்த உலகத்தில் நிற்கிற வழியிலிருந்து, அந்த நோக்கத்தை முன்னேற்றி செல்வதற்கு நாம் தைரியத்துடன் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே தேவனுடைய நோக்கம் அதை முன்னோக்கி செயல்படுத்த நமக்கு தைரியம் அவசியமாகிறது என்று நாங்கள் கூறுகிறோம். தன்னில்தானே போதுமான தேவன் தம்முடைய நோக்கத்திற்காக நாம் செய்யும் ஊழியத்தை உடனடியாக வழங்க முடியும் என்பது உண்மைதான். அவருடைய வல்லமையை பிரயோகிப்பதன் மூலமாக அவரால் எல்லா எதிர்ப்புகளையும், எல்லா சத்துருக்களையும் விலக்கி வைக்க அவரால் முடியும். அவர் தம்முடைய சித்தத்தை மனிதன் காணக்கூடிய வகையில் வானத்தில் எழுத முடியும், இதனால், அவர் விரும்பியிருந்தால் அவ்வாறாக உலகத்தாருக்கு நம்முடைய பிரசங்கத்தினால் சுவிசேஷத்தை வழங்க முடியும். அவர் விரும்பியிருந்தால், தமது வல்லமையினால் லேகியோன் தூதர்களை அனுப்பி எல்லா எதிர்ப்புகளையும் நிறுத்தவும், அவ்வாறாக அவர் தம்முடைய திட்டங்களை முன்னேற்றமடையச் செய்ய நாம் அவருக்கு அவசியமில்லை என்றும் காட்டியிருக்கலாம். ஆனால் அதே காரணத்துக்காக, அவர் தம்முடைய திட்டம் முன்னேறிச்செல்வது, தம்முடைய ஜனங்களின் பலிகளின் அவசியத்தில் நிற்கும்படி அவர் அனுமதிப்பது போல அவருடைய திட்டத்தை உலகில் சீரமைப்பதன் மூலம் நம்முடைய தைரியமான செயல்கள் அதன் சத்துருக்களை தோல்வியுறச் செய்யவும் அவற்றை விரட்டியடிக்கவும் அவசியமாகும்படி செய்கிறார். அவருடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தற்கால மற்றும் எதிர்கால நன்மைக்காகவும், தெரிந்தெடுக்கப்படாதோரின் எதிர்கால நன்மைக்காகவும் அவர் தம்முடைய திட்டத்தை அபிவிருத்தி -யடையச் செய்யும்படி நாம் தைரியத்தை பயிற்சி செய்யும் அவசியத்தின் பொருட்டு அதை உலகத்தில் விட்டுவைக்கிறார். எனவே நாம் சத்தியத்தை தற்காக்கும்படிக்கே அது தவறாக குறித்துக் காட்டப்படும்படியாக அவர் அனுமதிக்கிறார்; நாம் அவருடைய பிள்ளைகளை காப்பாற்றும்படிக்கு அவர்களை அவர் தவறாக நடத்தப்படும்படி அனுமதிக்கிறார். நாம் நீதியை தூக்கி நிறுத்தும்படியாக, அதை இழிவுபடுத்தும்படி அவர் அனுமதிக்கிறார்; மேலும் அவர் பரிசுத்தத்திற்கு ஆதரவாக போராடும்படியாக, அது எதிர்க்கப்படும்படி விட்டுவிடுகிறார். தேவன் இப்போது இவைகளை சூழ்ந்து கொள்ள விரும்புகிற நிலைமைகளின் கீழ் தைரியமாக நாம் போராட்டத்துக்குள் பிரவேசிக்காத பட்சத்தில், தேவனுடைய நோக்கம் மனுஷீக நிலையில் பேசுவதாக இருந்தால், பலனற்றுப் போகத்தக்கதாக இருக்கும். தேவன் தம்முடைய நோக்கத்தின் பக்கம் இருக்க உண்மைத்துவமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை சார்ந்திருக்க வேண்டும் என்று அவர் முன்னறிந்திருந்ததால் அதை முன்னேற்றமடையச் செய்ய அவர்களுடைய தைரியம் அவசியப்படும் ஒரு நிலைமைக்கு விட்டு விடுவதில் பிரியமாயிருந்தார். மேலும், இந்த தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார்களுக்கும், தைரியம் மிகவும் அவசியமாயிருக்கிறது. தேவனுடைய திட்டம் தன்னை கண்டு கொள்கிற எதிர்ப்பான சூழ்நிலைகள் மத்தியில்

**அவர்களில், சிறியோர்முதல் பெரியோர்மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள்முதல் ஆசாரியர்கள்மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர். அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங் காலத்தில் இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 6:13,15**

அவர்கள் தங்கள் சுயத்தை பலியிடுவதையும், ராஜ விசுவாசத்தையும் விவரித்துக்காட்ட வேண்டியது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. அவர்கள் இந்த நிபந்தனைகளை சரியான வகையில் பூர்த்தி செய்வது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. இது அவர்களுடைய குணாம்ச முன்னேற்பாட்டின் ஒரு பகுதியாக, அவர்களுடைய நிகழ்கால மற்றும் எதிர்கால பணிகளுக்கு அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கு இது அவசியப்படுகிறது. மேலும் ஜெயங்கொண்டவர்களாக நிரூபிக்க அவர்களுக்கு இது அவசியமாகும். சகோதரர்கள் அவர்களை சத்தியத்திடமாக கொண்டு வருவதற்கும், கிறிஸ்தவ போர் முறையில் அவர்களை உற்சாகப்படுத்தவும், தங்களுடைய விரோதிகள் மீது ஜெயங்கொள்ள உதவி செய்வதற்கும், தைரியத்தைப் பயிற்சி செய்வது அவர்களுக்கு அவசியப்படுகிறது. அவர்கள் இந்த குணப்பண்பை பயிற்சி செய்வது உலகத்தாருக்கும் அவசியமாயிருக்கிறது; ஏனெனில் அது அவர்களுக்கு இப்பொழுது சில தேவையான உதவியையும், ஆசீர்வாதத்தையும் கொண்டு வருவதுடன் நிச்சயமாகவே, ஆயிர வருட யுகமாகிய அடுத்த யுகத்தில் அவர்கள் ஜீவனுக்கான பரீட்சையில் வரும் போது, அவர்களுக்கு அது ஆசீர்வதிக்கப்பட்ட முன்மாதிரியாக நிரூபிக்கும்.

ஆனால் நமக்கு எதிராக சாத்தானின் மிகவும் வல்லமையான நண்பனாக, நமது அற்பமான சுபாவம் மற்றும் சீர்கெட்டுப்போன மாம்சம் இருக்கிறது. அதன் சீர்கெட்ட நிலையின் மூலமாகவே அவன் நம்மைப் பாவத்திற்கும், தப்பறைக்கும் கொண்டுவரும்படி நாடுகிறான்; மேலும் அதன் இயல்பான சுபாவத்தின் மூலமாக, அதன் பாவம் நிறைந்த தப்பறையான, மனச்சார்புகளுக்கு எதிராக அவன் நம்மை சுயநலம் மற்றும் உலகத்தனத்துக்கு வசப்படுத்த நாடுகிறான். நம்முடைய மாம்சத்தை, நம்முடைய மிகவும் மோசமான எதிரியாக்குகிறது எதுவென்றால், அது நம்முடைய ஒரு பாகமாக, முதலில் நம்முடைய மிகவும் வலிமையான பகுதியாக இருக்கிறது என்ற உண்மையே ஆகும்; எனவே நாம் அதனை மேற்கொள்ள நம்முடையதைக் காட்டிலும், நாம் அதிக பெலனுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு நம்முடைய புதிய சித்தங்களை நம்முடைய மாம்சத்தைக் காட்டிலும் அதிக அளவில் பலமுள்ளதாக மாற்றும் அளவிற்கு மீண்டும் செயல்படுத்தாவிட்டால், நாம் எவ்வளவு தான் தைரியமுள்ளவர்களாயிருந்தாலும், அது ஜெயங்கொள்ள முடியாததாக அதனை ஆக்கிவிடும். மேலும் நிச்சயமாகவே மற்ற கிருபைகள் மத்தியில், நம்முடைய போராட்டத்தில் நாம் ஜெயம் பெறும்படியான யுத்தத்தை மேற்கொள்ளும் பொருட்டு நம்முடைய தைரியத்தை நாம் பயிற்சி செய்வதை அவர் நம்மிடம் வேண்டுகிறார். நாம் நம்முடைய மாம்சத்தை, புறக்கணிக்கத்தக்க அற்பமான எதிரியாக இழிவாகக்

கருதிவிட வேண்டாம். மூன்று எதிரிகளில் எல்லாவற்றிலும் இதுவே மிகவும் வற்புறுத்துகிறதும், விடாப்பிடியானதுமாயிருக்கிறது; ஏனெனில் நம்முடைய வெற்றிகரமான போராட்டத்தால் சாத்தான் முழுவதுமாக குழப்பமடைகிறபோது, அவன் நம்மை சொற்ப காலத்துக்கு தனிமையாக விட்டு விடுகிறான்; உலகமானது நம்மை தோல்வியடையச் செய்யும் அதன் முயற்சிகளின் ஒவ்வொரு திருப்பத்திலும், அதன் செயல்திறனில் கட்டுப்படுத்தப்படும்போது குறைந்தபட்சம் அது கொஞ்ச காலத்துக்கு போராட்டத்தைக் கைவிடுகிறது; ஆனால் மாம்சம் ஒருபோதும் விட்டுவிடாது. தாக்குதலின் ஒரு இடத்தை சரி செய்யும் போது, அது இன்னொரு இடத்தை அடித்து வீழ்த்துகிறது, அவ்வாறாக தொடர்ச்சியான ஒரு போராட்டத்தை நடத்தி வருவதுடன், அது மெய்யாகவே மரணத்தில் ஒப்புக் கொடுக்கப்படுவது வரைக்கும், ஒருபோதும் விட்டுவிடுவதில்லை. அதை நிறைவேற்றி முடிக்க மொத்த வாழ்நாளையும் எடுத்துக் கொள்கிற ஒரு விஷயமாயிருக்கிறது. பிசாசு, உலகம், மாம்சம் ஆகிய இவைகள் அனைத்தும், பாவம், தப்பறை, தன்னலம், உலகத்தனம் ஆகியவற்றின் பல்வேறான வடிவங்களை நமக்கெதிராக கையாள்கின்றன. எதிரிகளின் ஒரு தொகுப்பு என்பது நம்முடைய புதிய சித்தங்களுக்கு எதிரிகளாயிருப்பவைகளே! எப்படியெனில் அவைகள் தங்களை நமக்கெதிரான தனிப்பட்ட எதிரிகளாக மட்டும் கையாள்கிறவர்களாயிராமல், அவர்கள் தனிநபரல்லாதவைகளையும், நம்முடைய தைரியத்துக்கு எதிரான விழுந்துபோன இயல்புகள் போன்றவற்றையும், நமக்கெதிரான எதிரிகளாக செயல்படவைக்கின்றன. அது, நம் கர்த்தர் கைது செய்யப்பட்ட போது, கெத்செமனேயில் சீஷர்களால் விவரிக்கப்பட்ட அச்சத்தைப் போலவும், பிரதான ஆசாரியனுடைய முற்றத்தில் பேதுருவால் வெளிப்படுத்தப்பட்ட அனுமான யூகத்தைப் போலவும் இருக்கிறது. வல்லமையான எதிரிகளாகிய உலகத்தாரால் சூழப்பட்டிருந்தாலும் கூட, நம்முடைய தேவனும், நம்முடைய சேனைத்தலைவரும் அவர்களைக் காட்டிலும் வல்லமையானவர்கள் என்றும், அவர்கள் நம் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்தவர்களாக இப்போது நாம் நம்முடைய தைரியத்தைக் காத்துக் கொள்வோமாக.

மத சம்பந்தமான பிரதேசத்தில் எதிர்ப்பை மேற்கொள்ள உயர்ந்த நிலையிலான தைரியம் காட்டப்பட வேண்டும், பெரும்பாலும் எப்போதுமே கிறிஸ்தவ பாதையில் தொடக்க நிலையில் உள்ளவர்கள் பாவத்திலிருந்து நீதிக்கும், கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிப்பதற்கும் திரும்பும்போது, வையப்படுதலுக்கும், ஏளனத்துக்கும், வெறுப்புக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். ஒருவர் பிரதிஷ்டையை செயல்படுத்த முயற்சி செய்யும்போது, இவையும், பிற துன்புறுத்தல்களும் அதிகரிக்கின்றன. அந்த பிரதிஷ்டையை ஒருவர் நிறைவேற்ற முயற்சிப்பது, முக்கியமாக சத்தியத்தைப் படிக்கிற ரீதியிலும், தப்பறைக்கு எதிராக சத்தியத்தைப் பற்றி சாட்சி கொடுப்பதும், துன்பங்களைக் கொண்டு வருகிறது. அதை சரியாக சந்திக்கவும், ஜெயம் கொள்ளவும் நேர்த்தியான தைரியம் அவசியப்படுகிறது. பெயர்ச்சபையிலிருந்து பிரிந்து, கர்த்தருடைய ஆவியில் அங்கிருந்து விலகிக் கொள்வதற்கு அபூர்வமான தைரியம் தேவைப்படுகிறது, பிரத்தியேகமாக அது: குடும்பம், வியாபாரம் மற்றும் சமூக பிரச்சனைகளுக்கும் பாடுகள் மற்றும் சமூக வெறுப்புக்குமாக மென்மையான ஐக்கியங்களை உடைப்பதற்கு வழிநடத்திச் செல்லும்போதும் தைரியம் அவசியமாகிறது. சத்தியத்துக்குள்ளும், சத்திய வட்டாரங்களுக்குள்ளும், வந்த பிறகு, ஒருவன் அடிக்கடி சகோதரர்கள் மத்தியில் அவர் ஏற்காத மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத, ஆனால் எதிர்க்க வேண்டிய நிலைமைகளை எதிர்கொள்ள நேரிடும். இந்த நிலைமைகள் கர்த்தருடைய சத்தியத்துக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் எதிரான புரட்சிசெய்தல் சம்பந்தப்பட்டதாக இருந்தால், உறுதியுடன் தொடர்ந்து நின்று மிகவும் மென்மையாக நேசிக்கப்பட்ட சிலரிடமிருந்து பிரிக்கப்படுதலானது வலியுறுத்தப்படும்போது, அந்த தொடர்ச்சியான போராட்டத்தில் காளையின் கொம்பைப் பிடித்து அதன் கழுத்தை மடக்கி அடக்குவது போன்ற தைரியம் தேவைப்படுகிறது, அதாவது குற்றம் செய்பவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொண்டு, அவர்களை அதற்கான ஆள் (fitman) வசம் ஒப்படைத்து வனாந்தரத்தில் ஆசசேலிடம் அவர்களை விட்டுவிடவேண்டும். அவர்களுடைய மாம்ச சிந்தைகள் அழிக்கப்படுகிற வரைக்கும், சகல சகோதரத்துவ உதவி மற்றும் தயவுகளை அவர்களிடமிருந்து நீக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட கலகங்கள் தடைபடாமல் தொடர்ந்து அனுமதிப்பது (மாம்சத்துக்கு) மிகவும் சுலபமாயிருக்கிறது; ஏனெனில் இது அநேக மனவேதனையிலிருந்து ஒருவரை காப்பாற்றுகிறது; ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழாக சரியாகச் செயல்படுவதற்கு, நம்முடைய மாம்ச உணர்வுகளை, தைரியமாய் போராடி அடக்கிக் கொள்ளவும், புது இருதயம், மனம் மற்றும் சித்தத்தை தைரியத்துடன் கர்த்தருடைய பொருத்தமான சித்தத்துக்கு முழு அளவில் கீழ்ப்படியச் செய்வதும் நமக்கு அவசியப்படுகிறது. நிச்சயமாகவே பிசாசு, உலகம் மற்றும் மாம்சம் ஆகியவைகளால் வளைந்து கொள்ளப்பட்ட நெருக்கமான வழியின் பரீட்சைகள், சிட்சைகள் மற்றும் சோதனைகள் மத்தியில் கடந்து செல்வதற்கு உயர்ந்த வரிசையிலான தைரியத்தை விசுவாசிகள் வெளிக்காட்ட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

## உபத்திரவ காலம் குறைக்கப்படுதல்

இந்த உபத்திரவ காலங்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை என்பதே வேதவாக்கியங்கள் நமக்கு தெரியப்படுத்துவதாகும். இது அணு ஆயுத யுத்தத்தின் சில வரையறுக்கப்பட்ட வடிவத்தை குறித்துக் காட்டுகிறதா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தம், ஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் நன்மையினிமித்தம், அந்த நாட்கள் குறைக்கப்படும் (மத். 24:22); அதாவது முழுமையான அழிவு மனுக்குலத்தாருக்கு நேரிடுவதற்கு முன்பாகவே அந்த நாட்கள் குறைக்கப்படும்.

பின்பு தீர்க்கதரிசிகள் அறிவித்தது போல சமாதான பிரபுவின் ஆளுகை வரும். அவர் சாலமோனைப் போலவே யுத்தங்கள் இல்லாதவராக இருப்பார், ஆனால் அவருக்கு முன்பாக முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கையிடும் (ஏசா. 9:6,7; லூக். 11:31). கிறிஸ்துவின்

நீதியின் ராஜ்யமானது, சமாதானம் நிறைந்த ஒரு இராஜ்யமாக இந்த உபத்திரவ காலத்தின் விளைவுகளால் மீதியாக விடப்பட்ட இடிபாடுகளுக்கு மேலாக கட்டப்பட்டதாக இருக்கும். இந்த எண்ணங்கள் பின்வரும் கேள்விகளை எழுப்புகின்றன. வேத வாக்கியங்கள் தமக்குள் முரண்படுகின்றனவா? மகாபெரிய போதகர் "**பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள், சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்**" என்று அவர் அறிவித்த போது அவர் எதை அர்த்தப்படுத்தினார்? (மத். 10:34) ஓ! அவருடைய கிருபையுள்ள அன்பு மற்றும் தயவின் செய்தியானது பாவத்தின் ஆளுகையின் போது உலகத்தில் ஏற்படுத்தப் போகிற விளைவை அவர் தீர்க்கதரிசனமாக குறிப்பிட்டு காட்டியுள்ளார். அந்தகார பிரபுவாகிய சாத்தான் அவரைமட்டுமல்ல, அவரைப் பின்பற்றுகிறவர்களையும் கூட எதிர்ப்பான் என்று அவர் நன்கு அறிந்திருந்தார். தேவபக்தியாய் நடக்க மனதாயிருப்பவர்கள் துன்பப்படுவார்கள் என்று அவர் முன்கூட்டியே அறிவித்துள்ளார். (மத். 24:9,10; 2 தீமோ. 3:12), அது அப்படியே நடந்து வந்திருக்கிறது, பத்தொன்பது நூற்றாண்டுகள் இதனை நிரூபித்திருக்கின்றன! அவர் தம்மைப் பின்பற்றுகிறவர்களை தம்மைப் போலவே, ஆயுதமின்றி சமாதானம் பண்ணுகிறவர்களாகவும், உதவி செய்கிறவர்களாகவும், அனுப்பினார். "**யாவரோடும், சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**" (எபி. 12:14). அவர் தம்மைப் பின்பற்றினவர்களுக்கு, "**பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்**" என்று ஆலோசனை கூறினார். (மத். 26:52)

சமாதானமும் அன்பும் நிறைந்ததாக வந்து கொண்டிருக்கிற ராஜ்யத்தைப் பற்றிய நற்செய்திகள், அதனை உலகம் முழுவதையும் ஆசீர்வதிக்கிற ஒரு ராஜ்யமாகவும், தேவதூதனுடைய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும் ஒரு ராஜ்யமாகவும் குறிப்பிட்டு காட்டுகின்றன. ஆனால் இது முரண்பாடாக உலகத்தை கோபப்படுத்துவதாக தோன்றுகிறது; அவிசுவாசிகளுக்கோ, துன்மார்க்கருக்கோ மட்டுமல்ல; ஆனால் சொல்லவே வருத்தமாக இருக்கிறது, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற அநேகர் தங்கள் சொந்த திட்ட அறிக்கைகள் மற்றும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளையும் செயல்படுத்துகிறார்கள். அவற்றில் பல சுவிசேஷ செய்திக்கு முரண்படுகின்றன. இருளானது ஏறக்குறைய சுயநலத்துடன் கலந்து, வெளிச்சத்தையும், சத்தியத்தையும், தேவனுடைய அன்பையும் வெறுக்கிறது. அதன் இருளான செயல்பாடுகள், சுயநலம், குறிக்கோள், மாய்மாலம் மற்றும் அராஜகம் ஆகியவை வெளிப்படாமலிருக்க அது வெளிச்சத்திடம் வந்து சேராது.

ஆனால், இதைக் காட்டிலும் அதிகமாக, அவருடைய வார்த்தைகள் தேசங்களைக் குறித்த தீர்க்கதரிசனமாயிருந்தன. நம்முடைய தற்போதைய நாகரீகமடைந்த காட்டு மிராண்டித்தன நிலைமைக்கு நம்மை கொண்டு வந்திருப்பது எது? உதாரணமாக, அதிக எண்ணிக்கையிலான, பன்னாட்டு நிறுவனங்களை கொள்ளைக்காரர்களாக ஆக்குகிறது எது? அப்படியானால் தங்களுடைய போட்டியாளர்களை ஆக்ரோஷத்துடன் தங்களுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டுவரத் தேடுவது எது? மனுக்குலத்தாரில் அநேகர் நேர்மையாக இருப்பதற்கு கஷ்டமாக இருப்பதும், அநியாயத்தின் மூலமாக இலாப மடைவதற்காக எந்த சந்தர்ப்பத்தையும் சுரண்டி சுயநலத்துக்குப் பயன்படுத்தும் அளவுக்கு மனுக்குலத்தாரின் விவேகங்களை கூர்மையாக்கியது எது? புத்தியுக்தியுடனும், புதுமையான ஆழ்ந்து செயலாற்றும் முறைகளுடனும் பிரத்தியேகமாக உலகம் தழுவிய இந்த இன்டர்நெட் (இணையம்) உலகத்திலும், எலக்ட்ரானிக் வர்த்தகத்தின் எண்ணற்ற வடிவங்கள் ஆகியவற்றில் அந்த வேகத்துக்கு ஏற்ப போதுமான அளவு நோக்கத்துடனும், போதுமான அளவு விரைவுடனும் சட்டம் இயற்றுபவர்கள் புதிய விதிமுறைகளை ஏற்படுத்துவது சாத்தியமாகவில்லை. E-வர்த்தகம் என்பது பொருட்கள் அல்லது சேவைகளை வாங்குவதும், விற்பதும், இன்டர்நெட்டை பயன்படுத்தியும், மேலும் பணம் மற்றும் தகவல்களை மாற்றிக் கொள்வதுமாகும். இது அமேசான், E-பே, ஷாப்பிபை, மற்றும் அநேகமானவற்றால் நடத்தப்படுகிறது. E-வர்த்தகத்தின் மதிப்பு, 30 டிரில்லியன் டாலர்களைத் தாண்டிவிட்டது.

## அறிவொளியூட்டப்படுதல் நேர்மையின்மையை ஆதரித்து வளர்க்கிறது

வழக்கத்தில் இல்லாத ஒரு மாறுபட்டவழியில், கிறிஸ்துவின் பிரமாணங்களும் உபதேசங்களும் குறிப்பிட்ட கருத்தில் இவை எல்லாவற்றுக்கும் பொறுப்பாளியாகிறது. எப்படி? கிறிஸ்து தம்மைப் பின்பற்றுகிறவர்களை விடுதலையாக்குகிற சுயாதீனமும், அவரும், அவர்களும் இருளாயிருக்கிற உலகின் மீது பிரகாசிக்கும்படி செய்கிற வெளிச்சமும், பரிசுத்தமாக்கப்படாத இருதயங்களிலும், மனங்களிலும் ஒரு பகுதியளவில் பெற்றுக் கொள்ளப்படும் போது, ஞானத்தை உருவாக்க முடியும். அந்த ஞானமானது தவறாக பயன்படுத்தப்படும்போது, அது சூழ்ச்சி அல்லது தந்திரமாக மாறுகிறது; சுயநலமிக்க ஒரு விதமான புத்தி சாதுரியமாகிறது. கிறிஸ்தவ மண்டல தேசங்கள், தாங்கள் பெற்றிருந்த வேதாகம சத்தியங்களை எந்த விகிதத்தில் கைவிட்டிருக்கின்றனரோ, அந்த விகித அளவில் அவர்கள் நன்மைக்கேதுவான தங்களுடைய செல்வாக்கை இழந்து வருகிறார்கள். ஒரு காலத்தில் பின் தங்கிய நிலையில் இருந்த பிற கிறிஸ்தவமல்லாத தேசங்கள் உலக வல்லரசுகளாக வெளிப்படுவதை இப்போது நாம் காண்கிறோம்.

நிதி, போர் நடவடிக்கை முதலிய நம்முடைய முன்னேற்றமான கருத்துக்கள் நிறைந்த நிலைமையில் ஆழ்ந்த சிந்தனைக்கு, தகுதியான ஒரு பொருத்தமான கேள்வி என்னவெனில் இப்போது அதிர்ச்சியூட்டும் வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற உலகளாவிய விரிவாக்கத்தின் போக்குகளால் இந்த உலகமானது உண்டாக்கப்பட்ட பிறகு. இந்த உலகத்தில் ஒரு கிறிஸ்தவனாக வாழ்வது சாத்தியமாகுமா? என்பதே ஆகும். கல்லான இருதயங்கள் உள்ள மனிதர்கள், பூமியெங்கும் நிறைந்திருக்கிற புறமதத்தைச் சார்ந்த நாடுகளின் வல்லமையான தலைவர்களாகும் போது, நீதியானது சீக்கிரத்தில் அநீதியால் மீறப்பட்டதாக மாறுகிறது!

ஆயினும் பிலாத்துவால் கேட்கப்பட்ட கேள்விக்கு ஒரு உலகம் வருகிறது என்று மகாபெரிய போதகராகிய

*நாங்கள் உழைத்து பிரயாசப்படுகிறோம், ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் எங்களது நம்பிக்கையை வைத்திருக்கிறோம்.*

இயேசுவால் கூறப்பட்ட பதிலில், தாம் யூதருக்கு ராஜா என்றும் அவர் ராஜாவாயிருப்பதற்கென்றே பிறந்திருக்கிறார் என்றும் பதிலளித்தார்; அவர் கூடுதலாக, "**என்னுடைய ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல**" (யோவா. 18:36) என்று கூறினார். அதாவது, இந்த ஒழுங்கிலான காரியங்களின் படியல்ல என்றார். எவ்வளவு உண்மை! நம்மில் அநேகர், நம்முடைய மீட்பர், மகாபெரிய மகிமையான ராஜாவாக, சாத்தான், பாவம் மற்றும் மரணத்துக்கு எதிராக பல நூற்றாண்டுகளாக வெற்றி பெறாத ஒரு போராட்டத்தை செய்து வந்திருக்கிறார் என்று தவறான கருத்தைப் பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே மகாபெரிய போதகரின் சொந்த உதடுகளிலிருந்து, அவருடைய ராஜ்யம், வரப்போகிற உலகத்தை சார்ந்தது என்றும், வரவிருக்கிற அநேக மகிமையான யுகங்களைக் கொண்டிருக்கிற ஒரு உலகம் அது என்றும் நாம் கற்றுக் கொள்கிறோம்.

## தேவனுடைய திட்டத்தில் உள்ள நியாயத்தன்மை

தேவனுடைய வார்த்தையில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள இந்த மகாபெரிய இரட்சிப்பின் திட்டத்துடன் தொடர்பான சகலமும், நியாயமானதாயிருக்கிறது. தெரிந்துக் கொள்ளப்பட்ட சபையின் கடுமையான பரீட்சையானது, அவர்கள் தேவன் மற்றும் கிறிஸ்துவினுடைய விசுவாச உண்மைத்துவமும், இரக்கமும் உள்ள ஆசாரியர்களாயிருக்கும் பொருட்டு அவருடன், அவருடைய ராஜ்ய மகிமையில் உடன் சேர்ந்தவர்களாக இருக்கவும், அவர்கள் மனுக்குலத்தாருக்கு உதவி செய்வதில் தேவனுடைய கருவிகளாயிருக்கவும் இன்றியமையாததாயிருந்தது. அவர்கள் மனுஷனை, ஆறாயிரம் ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக பாவத்திலும் அந்தகார பிரபுவின் ஆபத்தான ஆதிக்கத்தின் விளைவாகவும் உண்டான, விழுந்து போன நிலைமைகளிலிருந்து தூக்கி எடுப்பார்கள். இது மேசியாவின் ஆளுகையின் காலமாக வேதாகமம் முன்வைக்கிற "ஆயிர வருடங்களின்" போது நிறைவேற்றப்படும்; உலகத்தாரின் இரட்சிப்பாகிய மகாபெரிய வேலையை நிறைவேற்றும் அந்த காலப்பகுதி மிகவும் நீண்டதாகவோ, மிகவும் குறுகியதாகவோ இருப்பதில்லை.

ஆனால் சிலர் மிகச்சிறிய கூட்டமாகிய சபையை, வளர்ச்சியடைய செய்வதற்கே பத்தொன்பது நூற்றாண்டுகள் அவசியப்பட்டிருக்குமானால், முழு உலகத்தாரையும் தூக்கி எடுக்க எவ்வளவு அதிகமான காலம் அவசியப்படுவதாயிருக்கும்? என்று கேட்கக் கூடும். இந்த உலகத்தாரை ஆவிக்குரிய சுபாவத்துக்கும் மகிமைக்கும் உயர்த்துவது தெய்வீக நோக்கமல்ல, ஆனால் அதற்கு மாறாக உலகத்தாரை பூமிக்குரிய திரும்ப கொடுத்தல் ஆசீர்வாதங்கள் மற்றும் நிலைமைகளுக்கு உயர்த்துவதாகும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். சபைக்கு அருளப்பட்ட மேலான உயர்த்தப்படுதலின் காரணமாகத்தான் மரண பரியந்தமும் பலியிடுகிற கீழ்ப்படிதலாகிய அப்படிப்பட்ட கடுமையான பரீட்சைகளும் அவர்களுக்கு தேவைப்படுவதாக இருந்தது.

அந்தகார பிரபுவின் கட்டப்படுதலுடன், நீதியின் சூரியன் தன் குணமாக்கும் கதிர்களுடன் எழும்பும் போது பாவமும் சஞ்சலமுமாகிய இருள் சீக்கிரத்தில் நீங்கி போகும். உலகத்தின் மீதான அப்படிப்பட்ட ஆசீர்வாதமான செல்வாக்கு நிறைந்த ஒரு நூற்றாண்டே நிச்சயமாகவே அற்புதங்கள் நிறைந்ததாக இருக்கிறது. இன்னும் எப்படிப்பட்ட அற்புதமான கண்டுபிடிப்புகளும் ஆசீர்வாதங்களும் காத்திருக்கின்றன என்பதை யார் அறிவார்? (1 கொரி. 2:9). அடுத்தபடியாக மரண நித்திரையிலிருக்கிற எல்லாரும் படிப்படியாக விழித்தெழும்புவது நடக்கும். அவர்கள் மரணச் சிறை வீட்டிலிருந்து எழும்பி வருவார்கள் – வேதவாக்கியங்கள் அறிவிக்கிறபடி எழும்பி வந்து, அவர்கள் மெய்யான தேவனோடும் அவருடைய மகிமையான குமாரனாகிய மீட்பரோடும், பாவத்தின் கோட்பாடுகளுக்கு எதிராக, நீதியின் கோட்பாடுகளுக்கு அறிமுகமுள்ளவர்களாக மாறுவார்கள்.

ஏனெனில், கிறிஸ்தவனுக்கு இரட்சிப்பாகிய நூல் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுவதுமாக நெய்யப்பட்டிருக்கிறது. தங்களுடைய பாவம் நிறைந்த நிலைமை மற்றும் பாவம் நிறைந்த வழிகள் பற்றி துயரப்படுபவர்களுக்கு, தேவனற்ற உலகம், சீரற்ற வாய்ப்பு கொண்ட உலகம் ஆகியவை தாங்கிக் கொள்வதற்கு அப்பாற்பட்ட பகைமையானதாயிருக்கும். தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக இரட்சிப்பை அருளுகிற தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்துணர்ந்து கொள்ளாமல் இந்த வாழ்க்கைக்கு எந்தவொரு அர்த்தமும் இல்லை. இது பாவம் மற்றும் மரணத்திலிருந்து ஒரு புதிய ஜீவியத்துக்கு மன்னிக்கப்பட்ட ஒரு ஜீவியத்துக்கான விடுதலையின் செய்தியாகும், இது தங்கள் மகிழ்ச்சியை நிலைநிறுத்தியவர்களின் இதயங்களை மீட்பரில் களிகூரச் செய்கிறது.

யோபு 38:7-ல் கொடுக்கப்பட்டுள்ள ஒரு பாடத்தை நாம் படிப்போமாக: அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே, நீ எங்கே இருந்தாய்? என்று யேகோவா தேவன் தம்முடைய ஊழியக்காரனாகிய யோபுவிடம் கேட்டார். இந்த வசனத்திலிருந்து பூமியின் சிருஷ்டிப்பை சுற்றியிருக்கிற காட்சிக்குள்ளாக சுருக்கமான பின்னோக்கி செல்லும் கணநேர பார்வையை நாம் பெறுகிறோம். "தேவ புத்திரர்கள்" என்பதை தேவ தூதர்கள், உண்மையுள்ள ஊழியர்கள் என்றும் நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்தே தேவனுக்கு சாட்சிகளாயிருப்பவர்கள் என்றும் நாம் அர்த்தங் கொள்கிறோம்.

மகிமையான எதிர்காலத்துக்காக அது தாங்கி நின்ற வாக்குத்தத்தங்களெல்லாவற்றுடனும் இனிமேல் சிருஷ்டிக்கப்படப்போகிற ஒரு சந்ததிக்காக தேவன் ஏற்படுத்தியிருக்கிற இந்த புதிய விஷயத்தைப் பார்ப்பது பரலோக பார்வையாளர்களுக்கு எப்படிப்பட்ட களிகூருதலாக இருந்திருக்கும் என்பதை மங்கலாக மட்டுமே நாம் கிரகிக்க முடியும்.

நம்முடைய தற்போதைய நிலைமையிலிருந்து பார்க்கும் பொழுது இது வெகு தொலைவில் இருப்பதாகத் தோன்று-கிறது. உலகமானது நூற்றாண்டுகளாக பழமையானதும், அதன் சரித்திரம் நல்ல நோக்கங்களுடன் சிதறியடிக்கப் பட்டதாகவும், கோணலாகி போனதாகவும், கோடிக்கணக் கான ஜனங்களின் தனிப்பட்ட துயரங்கள் நிறைந்ததாகவும் ஒரு சந்ததி, தன் சிருஷ்டிகரான தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டதோர் சந்ததியாகவும் இருக்கிறது.

ஏதேன் தோட்டத்திலுள்ள புதிய குழந்தைகளாகிய ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சிருஷ்டிக்கும் கரத்தி-லிருந்து புதியவர்களாக மனுஷ இருதயம் விரும்பி கேட்கக்கூடிய எல்லாவற்றாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்க-ளாகவும் இருந்தனர், அவர்களுடைய கீழ்ப்படியாமையினி-மித்தமாக அவர்கள் மட்டுமல்லாமல், அவர்களை தொடர்ந்து வந்தவர்களும் ஜீவியத்துக்கான அடுத்தடுத்துள்ள வாய்ப்பு-களிலிருந்து தூக்கியெறியப்பட்டனர்; அந்த கீழ்ப்படியாமை-யாகிய ஒரே செயல் மூலமாக யுகா யுகமாக அவர்கள் உலக சமாதானம் மற்றும் ஆரோக்கியமாயிருத்தல் ஆகிய விஷயங்களில் தங்கள் பிள்ளைகளுக்கான சுதந்தரத்தை-யும் இழந்துவிட்டனர். தேவன் முதல் மனுஷன் மற்றும் மனுஷியின் மனங்களில் அவர்களுக்கு அறிவுக்கான தாகத்தையும் அதனை தணிக்கும் பொருட்டு, அது கலகம் விளைவிக்கும் செயலுக்கு அவர்களை வழிநடத்தும்படியான எண்ணத்தையும் ஆழ விதைத்தாரா? தீமை பற்றிய அறிவை வேறெந்த வழியிலும் அடைந்து கொள்ள முடியாது என்பதை அறிந்திருந்தும், பாவமான செயலுக்கு ஏன் அவர் ஒரு தண்டனையையும் கூடவே வைத்திருக்க வேண்டும்?

தீமை பற்றிய அறிவு, அதனை அறிமுகப்படுத்துதல் மூலமாக அல்லாமல் வேறெந்த வழியிலும் அடைந்து கொள்ளப்பட முடியாது என்பதை நாம் எளிதாக காணலாம். மீறுதல் தண்டனையைக் கொண்டு வரும் என்கிறதான கட்டளையை ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்காமல் இருந்திருந்தால் அவர்கள் கீழ்ப்படியாமல் இருந்திருக்க முடியாது. அதோடுகூட தேவன் மனுஷனானவன் பாவத்துக்-குள்ளாக விழுந்துபோகக்கூடிய தன்மையுடையவன் என்பதை தேவன் முன்னறிந்திருந்தது மாத்திரமல்ல, ஆனால் அதை அனுமதிக்கவும் செய்தார். இது அவருடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஏன்? ஏனெனில், அதன் விளைவுகளிலிருந்து அவன் விடுவிக்கப்படுவதற்-கான பரிகாரத்தையும் அவர் ஏற்பாடு செய்திருந்ததால், தேவன் தம்முடைய சர்வ ஞானத்தால் அதன் முடிவு, மனிதனை தெளிவான அறிவுக்கு வழிநடத்தும் என்றும், அந்த அறிவின் மூலமாக, அது அவனை பாவத்தின் கசப்பையும், இருளையும் உணர்ந்து கொள்ளும்படி செய்து அதற்கு மாறாக, நிகரில்லாத நல்லொழுக்க அறிவை அடைந்து கொள்வான் என்று முன்னறிந்திருந்தார். இந்த வழியில் மனுஷன் எல்லா நற்குணத்திற்கும் ஊற்றும், காரணமுமான தன் சிருஷ்டிகரை அதிகமதிகமாக முழுவது-மாக நேசிக்கவும், கனப்படுத்தவும் கற்றுக் கொள்வான். கிருபையிலிருந்து விழுதல் ஒரு போதும் நேர்ந்திராத பட்சத்தில் மனுக்குலமானது அனுபவிக்கக்கூடிய சந்தோஷத்-தைக் காட்டிலும் தேவனை மிகுதியாக போற்றி பாராட்டுவதும் மனுக்குலத்துக்கு மிக உயர்வான ஆசீர்வாதமான நிலைமையுமே இறுதியான விளைவாக இருக்கும்.

## இம்மானுயேல்

இம்மானுயேலின் (தேவன் நம்மோடிருக்கிறார்) வெற்றி என்பதற்கு பாவம் வீழ்த்தப்படுதல் என்று அர்த்தம். அதாவது சர்ப்பத்தின் தலையை நசுக்குதல். கிறிஸ்துவின் மகிமையான ஆளுகையின் தொடக்கத்திலேயே சாத்தான் கட்டப்பட்டு, கிறிஸ்துவின் ஆளுகையின் முடிவில் கடைசியாக அநீதியை விரும்புகிற எல்லோருடன் கூட சேர்த்து அவன் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவான். மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்... பயப்-படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி. 20:10; 21:8).

இந்த வேத பகுதிகளில் வருகிற அக்கினியானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலுமுள்ள குணாம்சத்தோடும் ஒத்துப்போகிறது; அது அடையாளமான-தாகும். ஏற்ற காலத்தில் தேவனுடைய சத்தியத்தின் முழுமையான வெளிச்சமும், அறிவும் சீர்திருந்துவதற்கான ஏராளமான சந்தர்ப்பமும் எல்லாருக்கும் கொடுக்கப்படும். நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களை-யும் பண்ண வேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் அதிகார-முள்ள யாவருக்காகவும் அப்படியேசெய்ய வேண்டும். நம்மு-டைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்த-முள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.... **"இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையையும் அடைகிறோம்: ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்."** (1 தீமோ. 2:1-6; 4:10) பின்பு மெய்யாகவே மொத்த உலகமும் தேவனுடைய மகிமையை அறிவிப்பார்கள். (எரே. 31:31,34)

உயிர்த்தெழுதலின் காலத்தின் போது மனுக்குலத்-தாரில் கோடிக்கணக்கான பேர் மரணத்தின் சிறை வீட்டிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் எல்லோருக்-கும், போதித்தல், உயர்த்தப்படுதல், சிட்சித்தல் மற்றும் கற்றுக் கொள்தல் ஆகியவை நித்திய ஜீவனுக்கான தெய்வீக ஆசீர்வாதத்துக்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகத் தேவைப்படும்.

***




கிர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர சகோதரிகள் யாவருக்கும் எங்கள் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய அனுக்கிரகத்தினால் ஜாண்சன் போதகர் எழுதிய E.Vol.4 "எபிஃபெனி கால தெரிந்தெடுப்பு" புஸ்தகம் தமிழில் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

704 பக்கங்கள் கொண்ட ஒரு புஸ்தகத்தின் விலை: ரூ.290

இந்த புஸ்தகம் தேவைப்படுபவர்கள் கீழ்க் காணும் முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.



வெளியிடப்பட்ட நாள்: அக்டோபர் 12, 2024

## எபிஃபெனி கால தெரிந்தெடுப்பு (E.Vol.4)

- எபிஃபெனி கால வரலாற்று உண்மைகள்
- தப்பறைவாதிகள் மற்றும் துர்நடத்தையுள்ளவர்கள் தேவனுடைய தயவை இழந்து போகுதல்
- நம் காலத்துக்கும் பொருந்தக்கூடிய சத்தியம் மற்றும் அதன் ஒழுங்குமுறைகள்
- முதல் தரமானவர்கள் (சிறுமந்தை) மற்றும் இரண்டாம் தரமானவர்கள் (திரள் கூட்டம்) பற்றிய புரிந்து கொள்ளுதல்கள்
- வேதாகம அடையாளங்கள் மற்றும் நிறைவேறுதல்கள்

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**